Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

போன்: 369

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ மாசி 3 ஆம் நாள் ரம்ழான் 8 (14-2-62) புதன்கிழமை இதழ் 4




# குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை கிடைக்கும்

## பொலிஸ், ராணுவம், அரசாங்க சேவையில் பெரும் சீர்திருத்தம்!

### பார்லிமெண்டில் அரசாங்க அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

சதித்திட்டம் சப்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள்மீது நியாயமான முறையில் விசாரணை நடத்தப்படும் என்றும் குற்றவாளிகளுக்குக் கடுந் தண்டனை அளிக்கப்படும் என்றும், பொலிஸ், ராணுவம், அரசாங்க சேவை ஆகியவற்றில் பூரண அளவில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா அறிவித்தார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பார்லிமெண்ட் கூடியபோது தோல்வியுற்ற சதித்திட்டம் சம்பந்தமாக 14 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அரசாங்கத்தின் சார்பாகப் பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## "பலாத்காரப் புரட்சிக்கு நாங்கள் விரோதமானவர்கள்"

### பார்லிமெண்டில் திரு. செல்வநாயகம் எம். பி.

கொழும்பு, செவ்வாய்

பலாத்காரமாக அதிகாரத்தைக் கைப்பற்றும் எந்த நோக்கமும் தங்கள் கொள்கைக்கு விரோதமென்றும் ஒரு பலாத்கார புரட்சி மூலம் அரசாங்கத்தை வீழ்த்தும் எந்த முயற்சிக்கும் தமது கட்சி விரோதமானது என்றும் தடை செய்யப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று பார்லிமெண்டில் பேசும்போது கூறினர்.

"ஆனல் குற்றவாளிகள்மீது சட்டரீதியான, சரியான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இப்போது கைதாகியிருப்பவர்களில் சிலர் ஒருபாவமும் அறியாதவர்களாயும் இருக்கக்கூடும். இத்தகையவர்களுக்கு தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க எல்லா சந்தர்ப்பத்தையும் அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இலங்கை போன்ற ஒரு நாட்டிலும் புரட்சி நடைபெறுவது சாத்தியமில்லையென்பதை ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஏனென்ருல் இங்குள்ள மக்கள் நாகரிகமடைந்தவர்கள். ஆனல் எனது கருத்து தவருனதாயுள்ளது. ஏனெனில் ஒரு சதியோ அல்லது சதிபோன்ற ஒன்ரே நடைபெற்றிருக்கிறது. எதுவாயினும் நாகரிக நிலையை விட்டு நாடு நழுவியிருக்கிறது. ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். ராணுவப்படைகள் தமிழ் மக்களுக்குக்கெதிராக உபயோகிக்கப்பட்டது. இப்போது சிங்கள மக்களுக்கு எதிராக உபயோகிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஒரு பகுதி மற்ருேர் பகுதிமீது ராணுவப் படைகளை உபயோகிக்கும் காலம் அதிகதூரத்திலிருக்காது. தமிழ் மக்களுக்கெதிராக ராணுதத்தை உபயோகித்த செயல் புரட்சியை ஊக்குவித்திருந்தால், அரசாங்கம் இப்போது பாடம் கற்றிருக்கும் என நம்புகிறேன்.

அரசாங்கம் புரட்சிக்கு அவசியமில்லாத வகையில் செயலாற்ற வேண்டியது அவசியம். அரசாங்கம் தனக்கு பார்லிமெண்டிலுள்ள பெரும்பான்மை பலத்தையே எப்போதும் நம்பியிருக்கக்கூடாது. நீதியும் நியாயமும் நிலவுகிறதா என்பதையே அரசாங்கம் கவனிக்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே புரட்சியைத் தவிர்க்கும் வழியாகும்" என்றும் திரு. செல்வநாயகம் கூறினர்.

## கவர்னர் ஜெனரலின் பெயரும்...

கொழும்பு, செவ்வாய்

புரட்சி சம்பந்தமாக கவர்னர் ஜெனரலின் பெயர் குறிப்பிடப்பட்டதாய் அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாயும், தான் மற்ற பிரஜைகளைப்போல் விசாரணைக்கு உட்படத் தயாராய் அவர் முன்வந்திருப்பதாயும் அதன்படி இப்போது விசாரணை நடைபெற்று வருகிறதென்றும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அறிவித்தார்.

வாக்குமூலமளித்த பொலிஸ் அதிகாரி ஒருவர், சதி பற்றி சர் ஜோன் கொத்தலாவலைக்கும், திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் தெரியுமெனக் கூறியதாயும், மற்றும் 3 பேர் இதே போல் கூறியதாயும் மேலும் அவர் தெரிவித்தார்.

## கைதானவர்கள் பற்றி மசோதா

கொழும்பு, செவ்வாய்

கைதுசெய்யப்பட்டிருக்கும் 29 பேர் சம்பந்தமான ஒரு மசோதா தயாரிக்கப்பட்டுவருவதாயும், வருகிற வியாழக்கிழமை பார்லிமெண்டில் இது சமர்ப்பிக்கப்படவிருப்பதாயும் சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா அறிவித்தார்.

## சதித்திட்டத்தில் சில அம்சங்கள்

கொழும்பு, செவ்வாய்

சதித்திட்டம் எவ்வாறு உருவாகியது; எளனென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை திரு. பீலிக்ஸின் அறிக்கை சாங்கோபாங்கமாக விளக்கியது.

மேலதிகாரத்திலிருந்த சிலர் சிலகாலமாக இத்திட்டத்தை மேற்கொண்டிருந்ததாயும் பலரைக் கைதுசெய்து ராணுவத் தலைமைக் காரியாலயத்திலுள்ள நிலவறையில் வைக்கவும், பின் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கவும் சதித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாயும் அவர் கூறினர்.

அரசாங்கத்தைக் கவிழ்த்து, பாராளுமன்றத்தைக் கலைத்து அரசியலமைப்புச் சட்டத்தை நிறுத்திவைக்கவும் அத்திட்டத்தில் இடமளிக்கப்பட்டதாய் அவர் கூறினர்.

ராணுவ அதிகாரி டி சேரம் சதித் திட்டத்தில் எடுத்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

சதித்திட்டம்

## "வேண்டுமானல் என்னை கைது செய்யுங்கள் நான் குற்றமற்றவன் என்று எனக்குத் தெரியும்"

—டட்லி

கொழும்பு, செவ்வாய்

சபையில் தம்மீது மிகவும் பாரதூரமான முறையில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாயும், எனவே தாம் விவாதத்தில் பங்குபற்றிக்கொள்ளத் தீர்மானித்திருப்பதாயும் இன்றுநடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் திரு. டட்லிசேனநாயக்கா கூறினர்.

"இச்சபையில் அச்சடித்து விநியோகிக்கப்பட்ட அறிக்கையும் கூட திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு சதித்திட்டம்பற்றித் தெரியும் என ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்ததாய் அறிக்கையில்கூறப்பட்டிருந்தது. பின், மூன்று அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்ததாய்க் கூறப்பட்டுள்ளது." என்றும் திரு. டட்லி கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது:-

"இவ்வித குற்றச்சாட்டுக்களை மறுப்பதற்காக நான் இங்கிருக்கவில்லை. இதுபற்றி முக்கிய அறிக்கையொன்றை விடுக்கவே நான் இங்கிருக்கிறேன். நான் குற்றமற்றவன் என்பது எனக்குப்பூரணமாகத் தெரியும். பாரபட்சமற்ற எந்த நீதிமன்றத்தையும் இதுபற்றி நான் எதிர்நோக்கத் தயார்.

இருவாரங்கள் நடைபெற்ற சம்பவங்களுக்குப்பின் இங்கு கூடியிருக்கிறேம். பெருந்தொகையானேர் பலதினங்களாக சதிபற்றி விசாரிக்கப்பட்டுள்ளனர். ஆனல் ஒரு தடவை கூட நான் விசாரிக்கப்படவில்லை. கவர்னர் ஜெனரலும் கூட விசாரிக்கப்பட்டதாக அறிகிறேன்."

பீலிக்ஸ்: "அது உண்மையல்ல. அநேக வதந்திகள் பரவியுள்ளன."

திரு. டட்லி தொடர்ந்துகூறியதாவது:—

"அரசாங்கம் நியாயமற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## "சுட்டுக்கொல்லும் உணர்ச்சி இருக்கிறது"

—பீலிக்ஸ்

கொழும்பு, செவ்வாய்

சதித்திட்டம் சம்பந்தமாக காவலில்வைக்கப்பட்டிருக்கும் 29 பேரையும், கால்பேஸ் மைதானத்தில் பகிரங்கமாகச்சுட்டுக்கொல்ல வேண்டுமென நாட்டு மக்களிடையே உணர்ச்சி ஏற்பட்டிருப்பதாய் பாதுகாப்பு, வெளிவிவகார பாராளுமன்றக்காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினர். "அரசாங்கம் சதியை முறியடித்துள்ளது. இப்போது சதிகாரர்கள்பற்றி மிகவும் கவனமாகவும், விழிப்புடனும் இருக்கவேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## "சத்தியாக்கிரகத்தை முறிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை நெருக்கடி உருவாக இதுவே காரணம்"

—டாக்டர் என். எம்.

கொழும்பு, செவ்வாய்

"நாட்டின் ஜனநாயக சரித்திரம் நெருக்கடியாக இருக்கிறது. எனது கட்சியும், கம்யூனிஸ்ட், மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியனவும் அடிக்கடி எச்சரித்து வந்துள்ள போதிலும் அது கவனிக்கப்படவில்லை" என்று டாக்டர் என். எம். பெரேரா பார்லிமெண்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

"அவசரகால நிலை இருக்குமானல் சதித்திட்டம் உருவாகும் எனக் கூறினேம். அப்போது அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனல் இப்போது உண்மையை உணருகிருர்கள். இத்திட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததையிட்டுப் பாராட்டுகிறேம். ஆனல் இதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. மேலும் இவ்வித சதி உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சத்தியாக்கிரகம் பற்றிப் பேச நான் தயாராய் இல்லை. ஆனல் அதை முறியடிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை பிழையானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகத்தை இராணுவத்திடம் விட்டதால்தான் இந்த நெருக்கடி உருவாகியது. இராணுவ உதவியுடன் தான் அரசாங்கம் நடக்கிறதென்று நினைத்த அதிகாரிகளாலேயே சதித் திட்டம் உருவாக்கப்பட்டது" என்றும் டாக்டர் பெரேரா குறிப்பிட்டார்.

# செங்கல்பட்டு, திருநெல்வேலி

## மாவட்டங்களில் தேர்தல் கண்ணோட்டம்

### அந்தநல்லூரில் 8 பேர் அபேட்சை மனு

திருநெல்வேலி மாவட்டத்தில் 4 பார்லிமெண்ட் ஸ்தானங்களும் 17 சட்டசபை ஸதானங்களும் உண்டு. திருச்செந்தூர் தொகுதியிலிருந்து திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் எஞ்சியுள்ள 3 பார்லிமெண்ட் தொகுதிகளில் மாத்திரம் போட்டியிருக்கிறது. மொத்தம் 15,67,048 வாக்காளர்கள் சட்டசபைத் தேர்தலில் வாக்களிப்பார்கள். மூன்று பார்லிமெண்ட் தொகுதிகளிலும் 13,83,302 வாக்காளர்கள் வாக்களிப்பார்கள். இந்த மாவட்டத்தில் மொத்தம் 1775 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## மும்முனைப் போட்டி

மூன்று பார்லிமெண்ட் தொகுதிகளில் 10 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். காங்கிரஸ 3 பேரையும், சுதந்திரா 3 பேரையும், கம்யூனிஸ்ட் 2 பேரையும், பிரஜா சோஷலிஸ்ட் ஒருவரையும் நிறுத்தியுள்ளன சுயேச்சையாக ஒருவரும் போட்டியிடுகிறார். திருநெல்வேலி தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. பி முத்தையாபிள்ளையை எதிர்த்து திரு. எம். இரத்தினசாமி (சுதந்திரா), திருமங்கள பொன்னம்பலம் (பிரஜா சோஷலிஸ்ட்), திரு. எஸ். இராசகோபாலாச்சாரி ஆகியோர் போட்டியிடுகிறார்கள். திரு. இராசகோபாலாச்சாரி சட்டசபைத் தொகுதிக்கும் போட்டியிடுகிறார். கோயில்பட்டி (ரிசர்வ்) தொகுதியில் மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. திரு. எஸ். சி. பாலகிருஷ்ணன் (காங்கிரஸ்), திரு. வேலுகுடும்பன் (சுதந்திரா), திரு. பாலியன் (கம்யூனிஸட்) ஆகியோர் போட்டியிடுகிறார்கள். தென்காசி

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

தொகுதியிலும் மும்முனைப் போட்டியே இருக்கிறது. காங்கிரஸ சார்பில் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த இளம் அத்துவக்காத்தான திரு. எம். பி சுவாமியும், சுதந்திரா அபேட்சகராக திரு. என். கமீதும், கம்யூனிஸட் அபேட்சகராக திரு. எஸ. ஏ. முருகானந்தமும் போட்டியிடுகின்றனர்.

## நேரடிப் போட்டி இல்லை

17 சட்டசபைத் தொகுதிகளில் 75 அபேட்சகர்கள் போட்டிக்கு நிற்கிறார்கள். காங்கிரஸ் 17, சுதந்திரா 16, கம்யூனிஸட் 8, தி. மு. க. 8, பிரஜா சோஷலிஸ்ட் 1, முஸ்லிம் லீக் 2, நாம்தமிழர் 2, சுயேச்சைகள் 20. இம்மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் மும்முரமாகியுள்ளது. காங்கிரசை திராவிட கழகமும், தமிழ் தேசியக் கட்சியும் இங்கு ஆதரவளிக்கின்றன. தி. மு. க.வுக்கும் முஸ்லிம் லீக்கிற்குமிடையே பரஸ்பர உடன்பாடு ஏற்பட்டுள்ளது. நேரடிப் போட்டியெதுவும் இங்கு இருக்கவில்லை. ஓட்டப்பிடாரம், கடயம் ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ, கம்யூனிஸ்ட், சுதந்திரா ஆகியவற்றுக்கிடையேயும் ஆலங்குளம் தொகுதியில் தி. மு. க., காங்கிரஸ், சுதந்திரா ஆகியவற்றிற்கிடையேயும் சாத்தான்குளம் தொகுதியில் காங்கிரஸ், சுதந்திரா, நாம்தமிழர் ஆகியவற்றிற்கிடையேயும் கடம்பூர் தொகுதியில் காங்கிரஸ, சுதந்திரா, சுயேச்சை ஆகியவற்றிற்கிடையேயும் மும்முனைப் போட்டிகள் ஏற்பட்டுள்ளது. அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ், சுதந்திரா, கம்யூனிஸட், தி மு. க. ஆகியவற்றிற்கிடையே நாற்கோணப் போட்டியும் ஏற்பட்டிருக்கிறது.

## தற்போதைய பிரதிநிதிகள் 8 பேர்

இப்போதைய அபேட்சகர்களில் 8 பேர் தற்போதைய எம். எல். ஏ.க்கள். இதில் ஏழுபேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்ற ஒருவர் நாம்தமிழர் கட்சித் தலைவர் திரு. எஸ. பி. ஆதித்தனார்ஆகும். தற்போதைய எம். எல். சி.யான திரு. கே. டி. கோசல்ராம் சாத்தான்குளம் சட்டசபைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியில் நிற்கிறார்.

இந்த மாவட்டத்தில் காங்கிரசுக்கு அடுத்தாற்போல் சுதந்திராக்கட்சி பலம் வாய்ந்ததாக இருக்கிறது. விக்கிரமசிங்கம் தூத்துக்குடி ஆகிய இடங்களில் கம்யூனிஸடுகளுக்குமில் தொழிலாளர்களின் ஆதரவு இருக்கிறது. கங்கைகொண்டான், தூத்துக்குடி, தென்காசி ஆகிய இடங்களில் தி. மு. க.வுக்கும் கம்யூனிஸடுகளுக்கிருப்பது போல் ஆதரவு இருக்கிறது.

## செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் பல தொகுதிகளில் முக்கிய தலைவர்கள் பலர் போட்டிக்கு நிற்கும் காரணத்தால் இங்குள்ள பல தொகுதிகள் பலரையும் கவர்ந்துள்ளன. சகல கட்சிகளும் இங்குள்ள குறிப்பிட்ட சில தொகுதிகளில் முகாமமைத்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## செங்கல்பட்டு பார்லிமெண்ட் தொகுதி

செங்கல்பட்டு பார்லிமெண்ட் தொகுதியில் நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு காங்கிரஸ கமிட்டித் தலைவர் திரு. ஓ. வி. அழகேசனை எதிர்த்து தற்போதைய பார்லிமெண்ட் அங்கத்தவரான டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி போட்டி போடுகிறார். 1957-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு. அழகேசனை எதிர்த்துப் போட்டியிட்ட டாக்டர் கிருஷ்ணசாமி 1728 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியிருக்கிறா. செங்கல்பட்டு தொகுதியில் இப்போது மொத்தம் 429415 வாக்காளர்கள் இருக்கிறார்கள். செங்கல்பட்டு பார்லிமெண்ட் தொகுதிகள் செங்கல்பட்டு, மதுராந்தகம், அச்சரப்பார்க்கம், உத்திரமேரூர் காஞ்சிபுரம் ஆகிய சட்டசபைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் தி. மு. க. தலைவர் திரு. சி. என் அண்ணாத்துரையும் தி. மு. கழகமும் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு பலத்த ஆதரவு அளித்து தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

## காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதி

காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதியில் தி. மு. க. தலைவர் திரு. அண்ணாத்துரையை எதிர்த்து பஸ்முதலாளியான திரு. நடேசமுதலியார் (காங்கிரஸ), திரு. கே. பரசுராம் நாயக்கர் (சுயேச்சை) ஆகியோர் போட்டி போடுகின்றனர். தி. மு. க.வினர் டாக்டர் கிருஷ்ணசாமியும், திரு. அண்ணாத்துரையும் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக தேர்தல் களத்தில் முழுநேர ஊதியம் செய்கின்றனர். இதேபோல் செங்கல்பட்டு பார்லிமெண்ட் தொகுதியிலும், காஞ்சிபுரம் சட்டசபைத் தொகுதியிலும் வெற்றிவாகை சூடுவதற்கு காங்கிரசும் முகாமமைத்து வேலை செய்து வருகிறது. கடந்த 1957 தேர்தலில் திரு. அண்ணாத்துரை பதினோராயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியவர். ஆனால் இத்தேர்தலில் பலத்த போட்டியேற்பட்டிருப்பதை திரு. அண்ணாத்துரையின் பேச்சுக்களிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இத்தொகுதியில் சுதந்திராக்கட்சி தி. மு. க.வை ஆதரிக்கிறது. ராஜாஜி திரு. அண்ணாத்துரையை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்ய மிகவிரைவில் வரவிருக்கிறார்.

## அபேட்சகர் எண்ணிக்கை

செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 பார்லிமெண்ட் தொகுதிகளும் 14 சட்டசபைத் தொகுதிகளும் இருக்கின்றன. பார்லிமெண்ட் தொகுதிகளுக்கு 3 காங்கிரஸ அபேட்சகர்களும், 3 தி. மு. க.வும், 3 சுயேச்சைகளும் போட்டியிடுகிறார்கள். சட்டசபைத் தொகுதிகளில் 14 காங்கிரஸ அபேட்சகர்களும், 8 தி மு. க, அபேட்சகர்களும் 8 சுதந்திரா அபேட்சகர்களும் போட்டி போடுகிறார்கள். பொன்னேரி சட்டசபைத் தொகுதியில் மாத்திரம் கம்யூனிஸட் போட்டியிடுகிறது. மற்றைய சில தொகுதிகளில் சோஷலிஸட், சோஷலிஸட் தொழிற்கட்சி, குடியரசு, சுயேச்சை அபேட்சகர்கள் தேர்தலுக்கு நிற்கிறார்கள்.

## அந்தநல்லூரில் 8 பேர் அபேட்சை மனு

அந்தநல்லூர் சட்டசபைத் தொகுதிக்கு மொத்தம் 8 பேர்கள் அபேட்சைமனு அளித்திருக்கின்றனர். ஒருவர் காங்கிரஸ, மற்றொருவர் திராவிடமுன்னேற்றக் கழகம், மற்றவர்கள் அனைவரும் சுயேச்சை அபேட்சகர்கள். காங்கிரஸ அபேட்சகராக மனு அளித்திருந்த திரு. அண்ணாமலை முத்துராசா சென்ற மாதம் திடீரென இறந்ததால் இத்தொகுதிக்கு நடைபெறவிருந்த தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. அபேட்சை மனுக்கள் அளித்தோர் விவரம்: திரு. சின்னத்துரை அம்பலகாரர் (காங்கிரஸ), திரு. கே. பி. அண்ணாவி (தி. மு. க.) திருவாளர்கள் அங்கண்ணான் செட்டியார், வடமலைகோனார், கணேசநாட்டார், பிச்சை, மரிய ஆரோக்கியம், பெரியசாமி-சுயேசசை அபேட்சகர்கள் அபேட்சை மனுக்கள் தெப்ரவரி 12-ம் திகதியன்று ஆராயப்படும். மனுக்களைத் திரும்பப் பெற பெப்ரவரி 15-ம் திகதி கடைசி நாள். மார்ச் 9-ம் திகதியன்று வாக்குப் பதிவு நடைபெறும்.

## ம. பொ. சி. ஆதரவு

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் பல்லடத்தில் ஒரு தேர்தல் கூட்டத்தில் திரு. பி. எஸ. சின்னத்துரைக்கு ஆதரவாகப் பேசினார். இந்தியாவின் ஒற்றுமைக்குப் பாடுபடும் கட்சியைத் தன்கட்சி எப்பொழுதும் ஆதரிக்குமென்றார் அவர். தமிழ்நாட்டு பி. சோ. தலைவரான திரு. சின்னத்துரை போன்ற தலைவர்களுக்குத் தமிழ்நாடு காங்கிரஸ ஆதரவளிக்காதது குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார். பொள்ளாச்சித் தொகுதியில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசி, நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியத்துக்கும் தான் ஆதரவளிக்கக்கூடும் என்று ம. பொ. சி. சொன்னார்.

---

## தோலகட்டி சனசமுக நிலைய 5-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

தோலகட்டி சனசமுக நிலையத்தின் 5-வது ஆண்டுவிழா மயிலிட்டி கிராமசபைத்தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸகரன் தலைமையில் நடைபெற்றது.

தேநீர்க்கடைகளை சிறுபான்மைத் தமிழர்களுக்கு திறந்துவிடச்செய்வதில் தான் முயற்சியெடுப்பதாகவும் தனது கிராமசபைப் பகுதியில் அப்படி இணங்காத கடைகளுக்கு லைசென்ஸ வழங்காமல் செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் திரு. ஸ்ரீபாஸகரன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திரு. கே. டானியல் பேசும்போது சிறுபான்மைத் தமிழர்களுக்கும் தேசியப்பற்றிருப்பதாகக் கூறினார்.

கூட்டத்தில் திருவாளர்கள்: எம். சி. சுப்பிரமணியம், சி. இ. குணரத்தினம், வி. சின்னையா, எம். ஐயாத்துரை ஆகியோரும் பேசினர். இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

புதுவருட உத்தியோகத் தேர்தலின்போது தலைவராக திரு. எஸ. செல்லத்துரையும், உபதலைவராக திரு. கே. யோசேப்பும், காரியதரிசியாக திரு என். சிங்கராசாவும், உதவிக் காரியதரிசியாக திரு. என். நேசராசாவும், தனாதிகாரியாக திரு. ஏ. அப்புத்துரையும், உபதனாதிகாரியாக திரு. ஏ. திருச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டனர். நிருவாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## உங்கள் தினப்பலன்

—சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசி 3ந் தேதி புதன்கிழமை (14-2-62) பகல் 1-31வரை தசமி. பின் ஏகாதசி இரவு 10.17 வரை மிருகசீரிடம். பின் திருவாதிரை. சித்தயோகம். பிரயாணம், கல்வி வர்த்தகத்திற்கு நல்ல தினம்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் ஜெனனமானவர்களுக்கு இவ்வாண்டின் முற்பகுதியில் சிறுகண்டமும், நடுப்பகுதியில் அபிவிருத்தியேற்பட்டு பிற்பகுதியில் கஷ்டபலன்களும் நடக்கும். கமத்தொழிலாளருக்கும் உத்தியோகத்தருக்கும் பலன்கள் நலம். பொருள்வரவு, சொத்துச் சேர்க்கை, இனசனஉதவி, பெரியோர் நட்பு, ஆதியன காணப்படுகின்றன. பெண்களுக்கு இவ்வாண்டில் குடும்ப சிறப்புக்களும், சுபகருமங்கள் நடத்தலும், விவாகப் பேறுகளும் காணப்படுகின்றன.

### நட்சத்திரப் பலன்கள்

அச்சுவினி:- வீண் பேச்சு, பகைமை.

பரணி:- நண்பர் உதவி, பொருள் வரவு.

கார்த்திகை:- மறதி, பொருள் நஷ்டம்.

ரோகிணி:- பொருள் வரவு, முதல்மூலம் லாபம்.

மிருகசீரிடம்:- தேகநலக் குறைவு, செலவு.

திருவாதிரை:- குடும்பசுகம் சுபகரும முயற்சி.

புனர்பூசம்:- குடும்ப நலம், குழந்தைகளுக்கு சுகம்.

பூசம்:- தாயாதிகளால் கஷ்டம். கவலை

ஆயிலியம்:- தேகநலம், முயற்சியில் ஊக்கம்.

மகம்:- கடும்உழைப்பு, பலன் குறைவு.

பூரம்:- பெரியவர் நட்பு, பண உதவி.

உத்தரம்:- குடும்பத்தில் நோய் துன்பம், செலவு,

அத்தம்.- புதியனவெற்றி. இலாபம்.

சித்திரை:- பிரயாணக் கஷ்டம், பணச் செலவு.

சுவாதி:- பிரயாண நன்மை. இலாபம்.

விசாகம்:- வித்தைமேன்மை, மதிப்பு

அனுஷம்:- முதியவர் பகை, கவலை.

கேட்டை:- பணவரவு, கஷ்டம் நீங்கல்.

மூலம்:- குடும்பநலக்குறைவு, இன்பசிந்தனை.

பூராடம்:- தொழிலூக்கம், நன்மை.

உத்தராடம்:- ஞாபக மறதி, பொருள் நஷ்டம்.

திருவோணம்:- வாக்கு வெற்றி, மதிப்பு

அவிட்டம்:- வீண் தர்க்கம், பகை.

சதயம்:- பணவரவு, நன்மை.

பூரட்டாதி:- பணவரவு, சமூக மதிப்பு.

உத்தரட்டாதி:- பெண்தொல்லை, பிதுருவழி ஆதரவு.

ரேவதி:- வாக்குவெற்றி, மதிப்புயர்ச்சி.

---

## மிளகு இறக்குமதிக்கு பிரத்தியேக லைசென்ஸ்

கொழும்பு, செவ்வாய்

மிளகு இறக்குமதி செய்பவர்கள் பிரத்தியேக லைசென்ஸ் ஒன்றைப் பெற்றுக்கொண்டே தொடர்ந்தும் இறக்குமதி செய்யலாம் எனத் தெரிகிறது.

மிளகு இறக்குமதி செய்பவர்கள் பொது இறக்குமதி லைசென்ஸில் அப்பொருளை இறக்குமதி செய்யமுடியாது எனவும் இதற்கெனத் தனிப்பட்ட இறக்குமதி லைசென்ஸ் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இறக்குமதி ஏற்றுமதிக்கட்டுப்பாட்டதிகாரி இறக்குமதியாளருக்குக் கூறியுள்ளார். இம்மாதம் 9-ம் திகதி தொடக்கமாக இப்புதியசட்டம் அமுலாகிவருகின்றது.

---


## உங்கள் நோய்

குணப்படுத்த உக்கிரவாதம் ஸ்ரீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# சோவியத் பிரதமரின் யோசனையை அமெரிக்கா நிராகரித்தது?

## படைகுறைப்புக்கு உச்சி மகாநாடு உடனடியான பலன் தராதாம்!

வாஷிங்டன், பெப். 13

ஜெனிவாவில் அடுத்த மாதம் 14-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் 18- நாடுகளின் படை குறைப்பு மகாநாட்டில் அந்த நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கலந்துகொள்ளவேண்டுமென்ற சோவியத் பிரதமர் குருஷ்சேவின் யோசனையை அமெரிக்கா நிராகரித்துவிட்டதாகக கூறப்படுகிறது.

18 நாடுகளின் படை குறைப்பு மகாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய மூவல்லரசுகளின் வெளி விவகார மந்திரிகள் கலந்துகொள்ளவேண்டுமென்றும் அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும் இதர நாடுகளின் வெளி விவகார மந்திரிகளும் கலந்து கொள்வது நல்லதென்றும் அமெரிக் ஜனாதிபதி கென்னடியும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மில லனும் சோவியத் பிரதமருக்கு யோசனை தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருந்தனர்.

இக்கடிதத்துக்கு சோவியத் பிரதமர் இதுவரை பதிலளிக்கவில்லையாயினும் படை குறைப்பு மகாநாட்டில் 18-நாடுகளின் அரசாங்கத் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று யோசனை தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதிக்கு சோவியத் பிரதமர் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

இக்கடிதம் பற்றி வாஷிங்டனிலுள்ள பிரிட்டிஷ், பிரஞ்சு, கனடா, இத்தாலி ஆகிய நாடுகளின் தூதுவர்களை அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் ரஸ்க் அழைத்து விபரம் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பின்பின் பிரிட்டிஷ் தூதர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் படை குறைப்பு மகாநாடு அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் ஒரு உச்சி மகாநாடாக்குவதால் சாத்தியமான பயனெதுவும் ஏற்படுமெனத் தாம் நினைக்கவில்லையென்றார்.

### ராஜாங்க மந்திரி கருத்து

அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் ரஸ்க் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

அரசாங்கத் தலைவர்கள் கூடிப் பேச்சு வார்த்தை நடத்துவது, தீர்வு காணக் கூடிய சாத்தியக் கூறுகளையும் சில சமயம் இல்லாமல் செய்துவிடலாம். அரசாங்கத் தலைவர்கள் சந்தித்துப் பேசுவதற்கான ஒரு சூழ்நிலையை வெளிவிவகார மந்திரிகளின் சந்திப்பினால் அல்லது இதர நடவடிக்கைகளினால் ஏற்படுத்திக் கொண்டு பின்னர் தலைவர்கள் சந்திப்பதனால் உருவான பயன் ஏற்படலாம்.

சோவியத் பிரதமரின் யோசனை பற்றி இதர மேற்கு நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. படை குறைப்பு மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் எட்டு நடுநிலைமை நாடுகளுடனும் சோவியத் பிரதமரின் யோசனைபற்றி அமெரிக்கா ஆலோசனை செய்யுமென்று தெரிகிறது.

### கனடா பிரதமர் கருத்து

குருஷ்சேவின் யோசனைபற்றி கனடா பிரதமர் திரு. டீபன் பேக்கர் கருத்துத் தெரிவிக்கையில் "உச்சி மகாநாட்டினால் உருப்படியான நன்மை ஏற்படுமானால் அந்த மகாநாட்டில் நான் கலந்து கொள்வேன்" என்று தெரிவித்தார். சோவியத் பிரதமரின் யோசனை பரிசீலனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

---

## மேற்கு இரியான்

### புதிய யோசனைபற்றி பரிசீலனை

ஹேக், பெப். 13

மேற்கு இரியானுக்கு பத்து ஆண்டு காலச் சுயாட்சிவழங்கி அதன் பின் ஐ. நா. மேற்பார்வையில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற ஒரு யோசனையை டச்சு மந்திரிசபை இன்று பரிசீலனை செய்யவருக்கிறது. இந்தபத்து வருடங்களுக்குள் மேற்கு இரியானை இந்தோனேஷியா வசப்படுத்திக்கொள்ள மாட்டாதென்றும் ஆனால் அத்துடன் தாராளமாக தொடர்பு கொண்டிருக்குமென்றும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை இந்தோனேஷியாவினால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

## ஈரானுக்கு இலங்கையின் தேயிலை

கொழும்பு, செவ்வாய்

ஈரான் தேசத்து வர்த்தக அமைச்சுடன் செய்து கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தம் ஒன்றுக்குக் கைச்சாத்திடுவதற்கென வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை ஈரான் சென்றுள்ளார். 4 கோடி ரூபாய் பெறுமதியுள்ள தேயிலையை இலங்கை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யும்.

இலங்கையிடமிருந்து தேயிலையைப் பெற்றுக்கொள்ள ஈரான் சம்மதம் தெரிவித்ததன் பேரில் திரு ஆழ்வாப்பிள்ளை ஈரான் சென்றுள்ளார். வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சர் திரு. டி. பி இலங்கரத்ன அண்மையில் கராச்சி சென்றிருந்தபோது, ஈரானிலிருந்து கராச்சி சென்றிருந்த வர்த்தகத்தூதுகோஷ்டியொன்றுடன் திரு இலங்கரத்ன வர்த்தக பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

ஈரானிடமிருந்து பெருந்தொகையான கருவாட்டை இலங்கை இறக்குமதி செய்யும்.

வர்த்தக ஒப்பந்தம் ஒன்றின் பேரிலல்லாது வெளிநாடுகளுடன் ஈரான் வர்த்தகம் நடாத்தமாட்டாது என்று புதிய அரசாங்க கொள்கை காரணமாக கடந்த ஏப்ரல் தொடக்கமாக இலங்கையிடமிருந்து தேயிலை இறக்குமதி செய்வதை ஈரான் நிறுத்தி விட்டிருந்தது.

---

## தபால்தந்தி ஊழியரின் சிரமதான சேவை

கொழும்பு, செவ்வாய்

தபால், தந்தி இலாகாவில் கடமையாற்றும் தலைமைக் குமஸ்தாவிலிருந்து காரியாலய கூலியாட்கள் உட்பட 21 பேர் சென்ற மாதம் சிரமதான சேவை செய்துள்ளார்கள். இவர்கள் சில தவிர்க்க முடியாத காரணங்களால் குவிந்திருந்த வேலைகளை அலுவலக நேரமல்லாதபோது எதுவித சம்பழமும் பெருது செய்து முடித்துள்ளார்கள்.

அறிக்கையில் மேலும் கண்டிருப்பதாவது:

'டிசம்பர் மதத்திலும் இந்த உத்தியோகஸ்தர்கள் அலுவலக நேரமல்லாத நேரத்தில் சிரமதான சேவை செய்துள்ளார்கள். இவ்விதம் 330 மணி நேரம்சேவைசெய்துள்ளார்கள்

போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல இந்த உத்தியோகஸ்தர்களைப் பாராட்டி அனுப்பியுள்ள கடிதமொன்றில் இவர்களுடைய இவ்வித சேவை அரசாங்க சேவையில் கடமையாற்றும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

---

# மாணவர் கிளர்ச்சி மற்றும் இரு இடங்களுக்கு பரவியது

## ஆஜர் மனு விசாரணையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது

டாக்கா, பெப். 13

கிழக்குப் பாகிஸ்தானில் டாக்காவில் ஆரம்பமான மாணவர் கிளர்ச்சி மேலும் இரு ஜில்லாக்களுக்குப் பரவியுள்ளது. நவகாளி,கோமுல்லா ஆகிய இரு ஜில்லாக்களிலும் நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். நவகாளியில் மாணவர் கோஷ்டியொன்று ரயில்மீது கற்களை வீசியதில் ரயிலில் பிரயாணம் செய்தவர்கள் பலர் காயமடைந்தனர். கோமுல்லா என்ற இடத்தில் மாணவர் கோஷ்டி நகரில் உள்ள கடைகளை மூடும்படி கடைக்காரர்களை நிர்ப்பந்தப் படுத்தினர்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான எச். எச். சுஹ்ரவர்த்தி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து டாக்காவில் ஆரம்பமான மாணவர் கிளர்ச்சி மற்றும் பல இடங்களிலும் பரவி இருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

சுஹ்ரவர்த்தியைத் தடுப்புக் காவலில் வைத்ததை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட ஆள் ஆஜர்மனுவை விசாரணை செய்யும் திகதியை மேற்குப் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

---

## டீசல் என்ஜின் தொழிற்சாலை

### வரணசியில் அமைக்கப்படும்

வரணசி, பெப். 13

வரணசியில்டீசல்ரயில்என்ஜின் உற்பத்தித் தொழிற்சாலையொன்று நிறுவப்படவிருக்கிறது. இதற்கான ஒப்பந்தமொன்று அமெரிக்க கம்பனியுடன் இந்திய ரயில்வே இலாகா செய்துள்ளது. இத்தொழிற்சாலையை அமைப்பதற்கு அமெரிக்க கம்பனி தொழில் நுட்ப உதவியளிப்பதுடன் அமெரிக்காவில் இந்தியருக்குப் பயிற்சியுமளிக்கும்.

---

## 4வது திட்டத்தில் மின்சார சக்தி

புதுடில்லி, பெப். 12

நான்காவது திட்டத்தில் மின்சார சக்தியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் விரிவான ஒரு அமைப்பை மத்திய நீர்ப்பாசன, மின்சக்தி மந்திராலய அதிகாரிகளும் திட்டக்கமிஷன், மத்தியநீர், மின்சார கமிஷன் ஆகியவற்றின் அதிகாரிகளும் அடங்கிய ஒரு குழு தயாரித்துவருகிறது.

நான்காவது திட்டத்தில் எவ்வளவு மின்சார சக்தி தேவை என்பதைக் குழுவினர் மதிப்பிடுவர். அதன் மூலம் பூர்வாங்க நடவடிக்கைகளை தக்க காலத்தில் நிர்ணயம் செய்யமுடியும். 4-வது திட்டத்தில் மின்சார திட்டங்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைவேலையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மத்திய நீர்ப்பாசன, மின்சார சக்தி மந்திராலய காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். சச்தேவின் தலைமையில் அமைந்த கமிட்டி செய்த பிரதான சிபார்சுகளில் ஒன்றின் பிரகாரம் இவ்விதமாக முடிவுசெய்யப்பட்டது. அக்கமிட்டி, மூன்ருவது திட்ட காலத்தில் பீஹார், மேற்கு வங்காளம் ஆகியவற்றின் மின்சார தேவைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டது. அவர்கள் செய்த சிபார்சுகள் பல மூன்ருவது திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

---

## பாரிசில் வேலை நிறுத்தம்

பாரிஸ், பெப். 13

பிரஞ்சு ஜனாதிபதி டிகோலின் அல்ஜீரியக் கொள்கையை எதிர்க்கும் தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனத்துக்கெதிராக சென்ற வியாழக்கிழமை பாரிசில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் நடந்துகொண்ட முறையைக் கண்டிக்கும்முகமாக இன்றுபாரிசில் வேலைநிறுத்தம் நடைபெறவிருக்கிறது.

சென்ற வியாழக்கிழமைநடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டுபோன எட்டுப் பேரின் சவஅடக்கம் நேற்று நடைபெற்றது.

---

## ஐந்து தலைவர்கள் மணிப்பூரில் கைது

புதுடில்லி, பெப். 13

மணிப்பூர் நாகாசபையின் ஐந்து தலைவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் காங்கிரஸ் எம். பி.யும் ஒருவர். அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

---

## அல்ஜீரியர்ஸில் கொள்ளை

### 10 பேர் கொலை

அல்ஜீரியர்ஸ், பெப். 13

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர். அல்ஜீரியர்சிலும், ஓரானிலும் மூன்று இடங்களில் கொள்ளையடிக்கப்பட்டன.

---

## டிரான்ஸ் போமர் தொழிற்சாலை

### கேரளத்தில்அமைக்கப்படும்

திருவனந்தபுரம், பெப் .13.

கேரளத்தில் மின்சார 'டிரான்ஸ்போமர்கள்' உற்பத்தித்தொழிற்சாலையொன்று அமைக்கப்படவிருக்கிறது. ஜப்பான்உதவியுடன் அமைக்கப்படும் இத்தொழிற்சாலை கனரகமின்சார உபகரணங்களையும் உற்பத்திசெய்யும் ஒரு கோடி ரூபாய் செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்படும்.

---

லாவோஸ்

## பூன்ஊம் நிபந்தனையை சுவன்னபூமா நிராகரித்தார்

வியன்டியன், பெப். 13

லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக முத்தரப்பு இளவரசர்களும் சந்தித்துப் பேசுவதற்கு வலதுசாரி தலைவர் இளவரசர் பூன் ஊம் விடுத்திருந்த நிபந்தனையை நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா நிராகரித்துவிட்டார்.

முத்தரப்பு இளவரசர்களும் ஜாஸ் சமவெளியில் சந்தித்துப் பேச வேண்டுமென்று இளவரசர் சுவன்னபூமா முன்பு அழைப்பு விடுத்திருந்தார்.

லாவோசிலிருந்து வியட்மின் துருப்புக்கள் வெளியேற்றப்படவேண்டு மென்றும் வலதுசாரிப்பகுதியினர் மீது நடத்தப்படும் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டுமென்றும் அதன் பின்பே பேச்சு வார்த்தைகளில் தாம் கலந்து கொள்ள முடியுமென்றும் இளவரசர் பூன் ஊம் நிபந்தனை விதித்திருந்தார்.

இந்த நிபந்தனையை இளவரசர் சுவன்னபூமா நிராகரித்து விட்டார்.

லாவோசில் வியட்மின் துருப்புக்கள் இல்லையென்று நடுநிலைமை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---

## அல்ஜீரிய பேச்சுவார்த்தை

### சுவிஸ் எல்லையில் நடைபெறுகிறது

பாரிஸ், பெப். 13

அல்ஜீரியாவின் எதிர்காலம் சம்பந்தமாக பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் அல்ஜீரிய தேசியத் தலைவர்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் பிரஞ்சு-சுவிட்சலாந்து எல்லைப்பகுதியில் ஒரு இடத்தில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப் பேச்சுவார்த்தைகள் நாளை முடிவடையலாமென்றும் ஆனல் அறிக்கையெதுவும் வெளியிடப்படுமுன் பாரிசுக்கும் டுனீஷியாவிலுள்ள அல்ஜீரிய தேசியத் தலைவர்களுக்கும் இந்தமுடிவு தெரிவிக்கப்பட்டு ஆலோசனை நடைபெறுமென்றும் அச் செய்தி கூறுகிறது.

---

## தமிழ்நாட்டில் விவசாயப் பல்கலைக் கழகம்

சென்னை, பெப். 13

தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய ராஜ்யங்களில் விவசாய பல்கலைக் கழகங்கள் அமைப்பதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

### மணி வாக்கு

'அன்பு அமுதத்தைப் போன்றது. அன்புள்ள நெஞ்சங்கள் என்றும் இளமையோடு தரிசனம் தருகின்றன'


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மாசி மீ 3 உ (14-2-62)


## பயன் கருதாப் பணி

அரசாங்க சேவையில் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களும் குறைந்த சம்பளம் பெறுபவர்களும் எவ்வித பிரதிபலனையும் எதிர் பாராது தமது உழைப்பை நாட்டின் நன்மைக்காகப் பயன்படுத்துவதே நாட்டுக்கு அவர்கள் செய்யும் உண்மையான சேவையாகும். அரசாங்க ஊழியர்கள் பொது மக்களுக்குச் சேவை செய்யும் பெருவாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் நாட்டின் நிலைமையை உணர்ந்து அலுவலக நேரத்தில் தாங்கள் பார்க்க வேண்டிய கடமைகளுடன் ஏற்கனவே பைசலாகாத பணிகளையும் வருவாயை எதிர்பாராது செய்வதானால் அது அவர்களின் சேவை மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும். இவ்வாறு ஒவ்வொருவரும் சேவைக்கு முதலிடங் கொடுத்து உழைப்பார்களேயானால் நாடு சகல துறைகளிலும் விருத்தியுற [illegible]லாம்.

தபால் தந்திப் பகுதியைச் சேர்ந்த பிரதம லிகிதர் தொடக்கம் காரியாலயத் தொழிலாளர்வரை சென்ற மாதம் சிரமதான சேவை செய்தனர். தங்களது நாளாந்த வேலைகளுடன் ஏற்கனவே குவிந்து கிடந்த சில வேலைகளையும் எவ்வித வருவாயையும் எதிர்பாராமல் இவர்கள் நிறைவேற்றியிருக்கின்றனர். இந்த சிரமதான சேவையைப் போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி.பி.ஜி. கலுகல்ல பெரிதும் பாராட்டியிருப்பதுடன் இவர்களின் சேவை மனப்பான்மை அரசாங்க சேவையிலுள்ள ஏனையோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்.

சம்பளத்துக்காகக் குறித்த சில மணித்தியாலங்களுக்கு மாத்திரம் பணியாற்றும் மனப்பான்மை நாட்டுக்கோ, மக்களுக்கோ எவ்வித நன்மையையும் செய்யப்போவதில்லை. நாடு வாழ்ந்தால்தான் நாமும், நமது சந்ததியினரும் வாழலாம் என்ற உயர்ந்த நோக்கம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். இந்நிலையில் தமது வழக்கமான நேர வேலைகளுடன் மேலதிக வேலைகளையும் மனங்கோணாமலும் பிரதிபலனை எதிர்பாராமலும் செய்து முடித்துள்ள தபால் தந்தி ஊழியர்களின் சிரமதான சேவை உண்மையாகவே பொதுமக்களின் பாராட்டுக்குரியது. சென்ற வருடமும் டிசம்பர் மாதத்தில் இவர்கள் 330 மணித்தியாலங்கள் சிரமதான சேவை செய்திருக்கின்றனர். இந்தப் புனிதமான பணியை அரசாங்க காரியாலயங்களிலுள்ள ஏனைய ஊழியர்களும் பின்பற்றுவார்களானால் நாடு முன்னேறுமென்பதற்கு ஐயமில்லை. ஊதியத்துக்காக மட்டும் உழைக்காது தேச நலனையும் உளத்தில் கொண்டு உழைப்பதுதான் உண்மையான சமூகத் தொண்டு. இத்தொண்டு மனப்பான்மை ஊழியர்களின் உளத்தில் வளருமாயின் நாட்டின் வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவுவதாகும்.

# காந்தி வழியில் இயங்கும் உலக சாந்தி சேனை

**உலக சாந்தி இயக்கத்தின் ஓர் அங்கமாக உலக சாந்திசேனை விளங்குகின்றது. கேரளத்தில் 1957-ம் ஆண்டில் விநோபாஜி சாந்திசேனையை தோற்றுவித்தார். சாந்திசேனையின் அவசியத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண் இக்கட்டுரையில் விளக்குகின்றார். இந்த இயக்கம் சம்பந்தமான ஒரு மகாநாடு சென்ற ஆண்டு டிசம்பரில் லெபனான் தேசத்தில் நடைபெற்றது.**

உலக சாந்தி இயக்கத்தின் முக்கிய அங்கமாக ஒரு உலக சாந்திசேனை அவசியம் என்ற எண்ணம் தோன்றியுள்ளது இது இந்தியாவில் உதித்த சாந்தி சேனையினால் ஒரளவு ஏற்பட்டது என்று சொல்லலாம். விநோபாஜி கேரளத்தில 1957–ல் எட்டு ஊழியர்களுடன் சாந்தி சேனையைத் தோற்றுவித்தார். இது தோன்றி நான்கு ஆண்டுகளேயாயினும் சாந்திசேனை என்ற பெயர் காந்திஜி கற்பித்ததே. சுதந்திர இயக்கத்திற்குப் பாதகமாக மதச் சண்டைகள், ஜாதிச் சண்டைகள் ஏற்பட்ட சமயங்களில் அவைகளை அஹிம்சா முறையில் தடுக்க சாந்தி சேனையின் அவசியத்தை காந்திஜி 1938–40 ல் சொல்லியிருக்கிறார். இந்த முழுக் கருத்தை உருவாகக மகாத்மாவுக்கு சமயம் கிடைக்கவில்லை. ஆனால் இதைப் பற்றி ஒரு சாந்தி சைனிகரின் தகுதிகள், பயிற்சி, உடை முதலியவைகளைப் பற்றி காந்திஜி தன் மனதில் உள்ளதை அவ்வப்பொழுது எழுதியிருக்கிறார். இப்பொழுது நாம் சொல்லும் சாந்திசேனை சில விஷயத்தில் வேறுபட்டிருந்தாலும், இது காந்திஜி சொன்ன யோசனையின் அடிப்படையிலே அமைந்துள்ளது.

உள் நாட்டில் சமூகக் கலவரங்களைச் சமாளிக்க சாந்தி சேனையின் அவசியத்தைச் சொன்னபோதிலும், சுதந்திர இந்தியாவில் வெளியிலிருந்து ஏற்படும் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் சாந்திசேனையினால் சாத்தியமாகுமென்றும் காந்திஜி கருதினார்.

## நம் முன் உள்ள வேலை

அன்பு-சத்தியத்தின் அடிப்படையில் அஹிம்சா சமுதாயத்தை ஏற்படுத்துவதே சாந்தி இயக்கத்தின் அடிப்படையான வேலை என்று காந்திஜி நமக்கு எடுத்துச் சொன்னார். இந்த வேலையின் முக்கிய அம்சங்களாவன:-

(1) மனோபாவம், நம்பிக்கைகள், கருத்துக்கள், மதிப்புக்கள் முதலிய எல்லாவற்றிலும் மக்களிடத்தில் பெரும் மனமாறுதல்களை ஏற்படுத்தவேண்டும்.

(2) அஹிம்சா சமுதாயத்தை வளர்த்துக் காக்கக் கூடிய சமுதாய-பொருளாதார-அரசியல் ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும்.

இது ஒரு மிக சிக்கலான வேலை. வாழ்க்கை எல்லாத் துறைகளிலும் வேலை செய்ய வேண்டிவரும். பலவித வேலை முறைகளைக் கையாள வேண்டும். வெவ்வேறு தேசங்களும் பல திட்டங்களைப் பின்பற்ற வேண்டிவரும். உலகத்தில் சாந்தி சேனையில் ஈடுபட்ட குழுக்கள் சமுதாயத்தின் அடிப்படையாக சத்தியம் - அன்பு- அஹிம்சை முதலியவற்றை ஏற்றுக் கொண்டு வெவ்வேறு வேலைத் திட்டங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

அஹிம்சா சமுதாயத்தில் தனக்குரிய வாழ்க்கை மதிப்புகளுடன் சமுதாய அமைப்புகளும் அவசியம் என்பதை சாந்தி ஊழியர்கள் போதுமான அளவு இன்னும் உணரவில்லை. இனி சாந்திக்கு ஆதாரமான உகந்த அரசியல், பொருளாதார சமூக அமைப்புகளைப்பற்றி அதிகமாகச் சிந்திக்க வேண்டும்.

## புதிய வழியைத் தேட வேண்டும்

மேலே கூறியதை நிறைவேற்ற அதிக காலம் செல்லும் அதற்குள்ளாக உள் நாட்டிலும் வெளியிலிருந்தும் முன்போலவே அஹிம்சை நிறைந்த சம்பவங்கள் பல ஏற்படலாம். யுத்தமின்மையே சாந்தி என்று எண்ணும் சாந்தி ஊழியர்களுக்கு இந்த பிரச்சினை எழாது. ஆனால் அஹிம்சா சாந்தி ஊழியர்களுக்கு இம்மாதிரி நிலைமைகளை சமாளிக்கும் பிரச்சினை எழும். கலவரங்களைப் பொதுவாக பொலிசும் பட்டாளமும் சமாளிக்கின்றன. இவை இரண்டும் இம்சைத் தத்துவத்தில் ஆதாரமுள்ளவை. இவைகளின் வெற்றி இம்சையின் வெற்றியே. பொலிஸ் படைக்கு எதிராக வேறு சக்தியை நிர்மாணிப்பதைப் பற்றி அஹிம்சா சாந்தி ஊழியர்கள் இதுவரையில் ஆழ்ந்து யோசிக்கவில்லை. மேலும் சைன்யத்திற்குப் பதிலாக அஹிம்சா முறையில் படையெடுப்பை எதிர்த்து நிற்கும் சக்தியை உருவாக்குவது பற்றியும் அவர்கள் சிந்திக்கவில்லை. சாந்தி ஊழியர்களின் நிலைமை இதுகாறும் எதிர்மறைவாகவே இருந்து வருகிறது. நேரிடைச் செயலைப்பற்றிச் சிந்திக்குத் காலம் இப்பொழுது வந்துவிட்டது.

இந்தத் திசையில் ஏதோ அதிகமாகச் செய்துவிட்டாலும் இந்தியாவின் சாந்திசேனை ஒரு புதிய முயற்சியாகும்.

தங்கள் தங்கள் தேசத்தில் அஹிம்சா சாந்தி ஊழியர்கள் சாந்திசேனைகளை நிர்மாணிக்க வேண்டும். இதற்காகப் புதிதாக ஆட்களை சேர்க்க வேண்டும் என்ற பொருள் அல்ல; சாந்தி ஊழியர்களே சாந்தி சேனையாக வேண்டும். நீண்ட கால சாந்தி வேலை செய்வதுடன் சாந்தி ஊழியர்களாக, பல பெயர்களுடன் இருந்தாலும் இந்தியாவில் காந்திய நிர்மாண ஊழியர்களாக லோக சேவகர்கள் ஆவார்கள். ஆனால் உள்நாட்டிலோ வெளியிலோ குறிப்பிட்ட சாந்தி வேலை செய்யும் பொழுது சாந்தி சைனிகர்களாக கருதப்படுவார்கள். சாந்தி சைனிகர் என்பதாலேயே இதற்குரிய சரீரப்பயிற்சி முதலியவை தேவையாக இருப்பதால் இந்த வேற்றுமை அவசியமாகிறது.

## சாந்தியை நாடி

தேசங்களிடையே பரஸ்பரமான உதவி வேண்டியதால் பல தேசத்து சாந்திசேவிகர்கள் சேர்ந்து உலக சாந்தி சேனை ஏற்படுத்துவது இயற்கையே அவசியமே. அந்தந்த தேசத்து சாந்தி சேனை பலமுள்ளதாக இருந்தால் இவைகள் சேருவது உலகசாந்திக்கு நல்ல பாதுகாப்பாகும். ஆனால் இன்று இந்தியாவில் உள்ள ஆரம்ப சாந்தி சேனையைத் தவிர சாந்தித்சேனை என்று வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும் ஏற்கனவே அஹிம்சா சாந்தி ஸ்தாபனங்கள் இருக்கும் தேசங்களில் சாந்தி சேனைகளை எளிதில் அமைக்கலாம். இவைகளில் ஒன்று திரண்ட சக்தி மதிப்பிற்குரிய ஒருஉலக சாந்தி சைன்யமாகத் திகழும்.

ஐக்கியநாட்டு சபையில் கோவாவைப்பற்றிய விவாதத்தில் யுத்த கருவிகள் படைத்த தேசங்கள்கூட மனப்பூர்வமாகவோ அல்லது தேசங்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள் அஹிம்சா முறையிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புவது தெளிவாகிறது. ஆனால் உலக அமைதியைக் காக்கும் ஐக்கியநாட்டு சபைகளை அமைதிக்காக வேறு வழியில்லாமல் பலாத்காரத்தை உபயோகிக்கின்றது. இதில் கொள்கை விரோதம் இருப்பதாக ஒருவரும் மறுத்துச் சொல்லவில்லை.

அஹிம்சா சக்தியைப் பாதுகாக்க முடியும் என்ற எண்ணம் மக்களிடையோ அரசாங்கங்களிடையோ இல்லை.

ஒரு உலக சாந்தி சேனையின் தோற்றத்தினால் இந்த எண்ணம் உருப்பெறும். இதன் மூலம் உலக சாந்திக்கு ஒரு வழி தேடுவதற்கு ஒரு முக்கியமான அங்குரார்ப் பணமாகும்.

உலக சாந்திசேனை எப்படி வேலை செய்யும் என்று சொல்லுவது இப்பொழுது சாத்தியமில்லை. ஆனால் இந்தச் திசையில் ஒரு முதல்படி எடுத்து வைக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

## குறிக்கோளற்ற கல்வி பிரச்சினைகளைத் தீர்க்காது

**—குருநாகல் எ. பி.**

குருநாகல், செவ்வாய்

தற்போதுள்ள அரசாங்கத்தினால் கல்வித்துறையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்ட போது பிற்போக்குவாதிகள் அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்தை முறியடிக்கமுனைந்தனர். அப்போதுகுருநாகல்மேற்பிராணியார் வண லாக்தாசா டி' மெல் துணிகரமாக வானொலி மூலம் தமது கருத்துகளை வெளியிட்டு அரசாங்கத்தில் கல்வித்திட்டத்தை ஆதரித்தார்.

இவ்வாறு குருநாகல் எம்.பி. திரு. ஜெயபத்திரான, ஆனந்தா வர்த்தக கல்லூரியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாச்சார விழாவிலும் பரிசளிப்புவிழாவிலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜெயபத்திரான மேலும் பேசுகையில் கூறியதாவது: குறிக்கோளற்ற கல்வி நாகரிகஉலகில் தோன்றியுள்ள பிரச்சினைகளைத்தீர்க்கஉதவாது பிரச்சினைகளை நாம்விரைவில் தீர்த்துக் கொள்ளாவிட்டால் எமது நாகரிகம் அழிந்துவிடும் வண. லாக்தாசா டி'மெல் பேசுகையில் தெரிவித்ததாவது:

இன்று சகல பகுதிமக்களும் கல்வி பயில வசதியளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தனது கல்வித் திட்டத்தை அமுல் நடத்த நாம் எம்மாலான உதவியைச்செய்யவேண்டும்.

## 187 ஓட்டங்களால் மத்தியகல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 187 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. யாழ். மத்தியகல்லூரியில் வி. ரி. மகாலிங்கமும், டி. தர்மதாசாவும் மிகவும் திறமையாக விளையாடி பல விக்கட்டுகளையும், ஓட்டங்களையும் பெற்றனர்.

---

, சென்னை, பெப். 13

பிரபலபின்னணிப்பாடகிதிருமதி பி. சுசீலா வீட்டில் திருடியதாகக் குற்றஞ்சாட்டி அருணசலம் என்ற 22 வயது இளைஞர் மீது தொடரப்பட்ட வழக்கில் சைதாப்பேட்டை 6-வது மாகாண மாஜிஸ்டிரேட் திரு. ஆர். ராதகோபாலன் எதிரிக்கு 18 மாதக்கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## ஐயாறன் எழுதுவது

எட்டுக் கிரகங்களும் கூடிய தினத்தில் நாங்கள் என்ன செய்தோம் தெரியுமா? சித்தரஞ்சன் எனும் அழகான ரயில்வே நகரத்தையும், எஞ்சின் செய்யும் மகத்தான தொழிற்சாலையையும், வழியில் துர்க்காபூரிலுள்ள பிரம்மாண்டமான எஃகு தொழிற்சாலையையும் பார்த்துவிட்டு, 150 மைல் தூரம் காரில் பிரயாணம் செய்தோம்.

வழி எல்லாம் பல இடங்களிலும் பஜனை கோஷங்கள். ராமர் படத்துடனே ஊர்வலங்கள். பலர் காவி உடுத்து, பக்தி பரவசத்தில் நடனமாடிக்கொண்டே தெருவில் பெரிய ஊர்வலமாக வந்தனர். ஆங்காங்கே அன்னதானங்கள் எல்லாம் நடந்தன.

இலங்கையிலும் தமிழகத்திலும் பொது மக்களின் உள்ளமும் செயலும் எப்படி இருக்கிறதோ அப்படியேதான் வெகுதூரத்திலுள்ள வங்காளத்திலும் இருப்பதைக் கண்டேன். தூரம் எவ்வளவு இருந்தாலென்ன? பேசும் மொழி யாதாயினுமென்ன? இந்தியா, இலங்கைப பொது மக்களின் உள்ளமும் பண்பும், ஒரே மாதிரியாகத்தான் உள்ளதென்பதை நேரில் காணமுடிந்தது.

∴ ∴ ∴

கல்கத்தாவில் நாங்கள் தங்கியிருந்த பெரிய வெள்ளைக்கார ஓட்டலில், ராமதாஸ் என்பவர் ஒரு 'வெயிட்டர்.' சிரித்த முகம், எட்டுக் கிரகமும் சேர்ந்ததற்கு என்ன செய்தீர்கள்? என்று கேட்டேன். அவர் பக்கத்திலுள்ள ஒரிஸா மாகாணத்திலிருந்து பிழைப்புக்காக வந்தவராம். அவரைப்போலவே ஒரிஸாவிலிருந்து வந்த சுமார் 30 பேர் ஓரிடத்தில் சேர்ந்து வசிப்பதாயும், தங்களுக்குள்ளாக நூறு ரூபாய்வரை வசூலித்து, பஜனை, வழிபாடு, ஓமம், ஏழைகளுக்கு அன்னதானம் எல்லாம் செய்ததாயும் பெருமையுடன் சொன்னார்.

பக்கத்திலே 4 அடுக்குள்ள வீடு. மேலே மொட்டை மாடியில் சில தொழிலாளர் வசிக்கின்றனர். இரவு 10 மணி இருக்கும். அங்கு ஒருவர் பூஜை செய்ய, மற்றவர்கள் பக்தியுடன் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். பூஜை முடிந்ததும் எல்லோரும் கீழே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். பூஜை செய்தவர் அவர்களது நெற்றியிலே திருநீறிட்டு ஆசீர்வதித்தார். பெரிய நகரமான கல்கத்தாவிலும் மக்களுக்கு எவ்வளவு பக்தி!

∴ ∴ ∴

அஷ்டகிரகங்கள் கூடிக் கலைந்துவிட்டன. என்றாலும் எங்கள் யாவரையும் அது ஒன்றுமே செய்யவில்லை. அப்படிக் கவலையில்லாமல் இருக்கப்படாதென்றும், இனியும் ஏதாவது செய்யலாமென்றும் சிலர் எச்சரிக்கிறார்கள். இந்த கிரகங்கள் அடிக்கடி இப்படிக் கூடினால் தேவலாம்போலிருக்கிறது. மக்கள் தெய்வத்தை மறக்காமல், தானதர்மங்களைச் செய்து வாழத்தூண்டிய அந்த கிரகங்களுக்கெல்லாம் மிச்சம் தாங்க்ஸ்!

∴ ∴ ∴

கிரகங்கள் கூடுகையில் இந்தியாவில் பிரயாணம் செய்ய வேண்டாமென்று என்னை நண்பர் ஒருவர் எச்சரித்தார். தலைவலி மாத்திரை, ஜுரா மாத்திரை, பேதிமாத்திரை எல்லாமெடுத்துக்கொண்டு சென்றேன். ஆனால் அந்த மாத்திரைகள் என் பல சகாக்களுக்கும் பயன்பட்டன. எனக்குத் தேவைப்படவில்லை. சுகமாக ஈழம் திரும்பிவிட்டேன்.

வேயுறு தோளி பங்கன், விடமுண்ட கண்டன், என் உளமே புகுந்த அதனால்தான், அந்தக்கோள்கள் எல்லாம் மிகவே நல்ல நல்லவையாக இருந்து சுகமே என்னை இங்கு சேர்த்தனபோலும்.

# பொலிஸ் நிலையத்தில் 24 வயது இளைஞரின் பரிதாபமரணம்

## 'அம்மோ! அம்மோ! என்ற கூக்குரல் கேட்டது' —சாட்சி

## "மின்சாரப்பகுதியின் கவனக்குறைவும் அசிரத்தையும்தான் காரணம்'

—மரணவிசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், புதன் மின்சாரத்துக்குப் பலியான யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த 24வயது இளைஞரான எஸ். வி. டென்னிசன் என்ற பொலிஸ் கான்ஸடபிளின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடத்திய திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், 'இத்தகைய இளம் உத்தியோகத்தரின் பரிதாபகரமான முடிவுக்கு அரசாங்க மின்சாரப் பகுதியனரின் கவனக்குறைவும், அசிரத்தையும்தான் காரணம்" என்றுகுறிப்பிட்டார்.

சென்ற திங்கட்கிழமை காலை மின்சாரத்துக்குப் பலியான யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவரும் வெலிகமையைச் சேர்ந்தவருமான பொலிஸ் கான்ஸடபிள் எஸ்' வி: டென்னிசனின் மரணம் சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு.எஸ. கனகரத்தினம் விசாரணைநடத்தினர்.

### அம்மோ, அம்மோ என்று சத்தமிட்டார்

பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ஜி. திஸ்ஸநந்ததாசா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்.

பொலிஸ் விடுதியில் ஒலைக் கொட்டிலில் நானும் காலஞ்சென்றவரும் இருந்து வந்தோம். நேற்றுக்காலை நான் அந்த விடுதியிலிருந்தேன். காலஞ்சென்றவர் காலையில் அணிவகுப்புக்குச்சென்றுதிரும்பினர். பின்னர் சுமார் 8மணியளவில் காலைக்கடன் கழிக்கச் சென்ருர் செல்லும்போது ரேடியோவின் ஏரியல் வயர் கீழே விழுந்துவிட்டதென்றும், அதை கூரையிற் தூக்கிப் போடப் போவதாகவும், அவர் சொன்னது என் காதில் விழுந்தது. சில நிமிஷங்கள் கழித்து "அம்மோ! அம்மோ!" என்ற கூச்சல் கேட்டது. நான் அங்கு ஓடினேன். அப்பொழுது அவர் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். வலதுகையில் ஏரியல் வயரை பிடித்திருந்தார். நான் அவர் பிடியிலிருந்து வயரை விடுவிக்க எத்தனித்தேன்." வயரைத் தொடாதே" என்று பொலிஸ் சார்ஜண்ட் சத்தமிட்டார். ஒரு தலையணையைக் கொண்டுவருவதற்கு ஓடினேன். இதற்கிடையில் "மெயின் சுவிட்சை" அணைக்கும்படி காலஞ்சென்ற டென்னிசன் சத்தமிட்டார்,

இரண்டாவது குடிசையிலிருந்த 'மெயின் சுவிட்சை' கான்ஸடபிள் மோமசிறி அணைத்ததார் அவர் வயரைப் பிடித்த கையை இன்னமும் விடாமலிருந்ததால் 'பியூஸ' கட்டையையும் நான் அகற்றினேன். இதன்பின் ஒரு தடியின் உதவியுடன் காலஞ்சென்றவரின் கைப்பிடியிலிருந்து 'வயரை' அகற்றிவிட்டு அவருக்கு முதலுதவியளித்து விட்டு ஆஸபத்திரிக்கு எடுத்துச்சென்ருேம். அவரைப் பரிசோதனை செய்தபின் உயிர் பிரிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

பொலிஸ சாஜன்ட் சில்வாவும் கான்ஸடபிள் சோமசிறியும் இதேபோன்று தமது சாட்சியத்திலும் தெர்வித்தனர்.

யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப் பகுதி "போர்மன் திரு. பி. ஜே. அரசரத்தினம் சாட்சியமளிக்கையில் தமக்கு அரசாங்க மின்சாரப்பகுதி என்ஜினியரிடமிருந்து தகவல் கிடைத்ததும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச்சென்று பார்வையிட்டதாகத் தெரிவித்தார். மின்சாரக்கம்பிமீது 'ஏரியல்" கம்பி விழுந்துகிடந்ததாயும் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பி நல்ல நிலையில் இருக்கவில்லையென்றும் கூறினர். 'இலேசாகத் தட்டுப்பட்டால்கூட ஒருவரைச் சாகடிக்கக்கூடிய சக்தி வாய்ந்தது அந்த மின்சாரம்' என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்க மின்சாரப் பகுதியின் மின்சார என்ஜினியர் திரு ஏ. ஏ. குக் சாட்சியமளிக்கையில் தாம்அந்த இடத்துக்கு காலை 9–15 க்குச் சென்று பார்த்ததாகவும் 'ஏரியல்' வயரும் பிரதான மின்சாரக் கம்பியும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கிடக்கக் கண்டதாகவும் கூறினர். இப்பகுதி அரசாங்க மின்சாரப் பகுதியின் பராமரிப்பிலுள்ளதென்றும் அவர் கூறினர். 'ஏரியல்' வயர் ஒன்று மின்சாரக் கம்பிக்குக் குறுக்கே செல்லக் கூடியதபக கட்டுவது எப்பொழுதும் பாதுகாப்பற்றதாகும்' என்றுகூறினர். வழமையில் ஓலைக் குடிசைகளுக்கு மின்சார விநியோகம் செய்யப்படுவதில்லையென்றும் இந்த இரு குடிசைகளுக்கும் தனக்குத் தெரிந்த வரையில் சென்ற நானகு வருடங்களுக்குள் புதிதாக மின்சாரக் கம்பிகள் மாற்றப் பட்டதில்லையென்றும் அவர் சொன்னர்.

அரசாங்க மின்சாரப் பகுதி போர்மன் திரு. எஸ். சிவராஜா சாட்சிய மளிக்கையில் இப்பகுதி மின்சாரக் கம்பிகளில் பழுதிருந்ததைத் தான் கவனிக்கவில்லையென்றும் கவனித்திருந்தால் அது பற்றி அறிவித்திருப்பா ரென்றும் தெரிவித்தார். இப் பகுதிக்குப் புதிதாக மின்சாரக் கம்பிகள் போடப்பட வேணடுமென்று சென்ற நிதிவருடத்தில்தான் அறிவித்ததாகவும் அவர் கூறிளுர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. பி. ஜோஹரன் சாட்சிய மளிக்கையில் பிரஸ்தாப ரேடியோ சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் அரசாங்கத்திஞல் வழங்கப்பட்டதென்றும் 'ஏரியல்' வயரும் ஐந்துவருடமாக இருக்கிறதென்றும் கூறினர்.

விபத்திஞல் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இந்த இளம் உத்தியோகத்தரின் மரணம் துரதிர்ஷ்ட்ட வசமான பரிதாபத்துக்குரிய சம்பவம் அரசாங்க மின்சாரப் பகுதியினரின் அசிரத்தையில்லா விட்டால் இச் சோக சம்பவம் நிகழ்ந்திருக்காது.

பொலிஸ் விடுதியில் சுமார் ஐந்து வருடங்களுக்குமுன் அரசாங்கத்திஞல் பொருத்தப்பட்ட ரேடியோ ஏரியல் வயர் மின்சாரக் கம்பிக்குக்குறுக்கே யிருந்திருக்கிறது. இது மின்சார விதிகளுக்கு மாருன தும் ஆபத்தானதுமாகும் இப்பகுதியை மேற்பார்வை செய்யும் பொறுப்புள்ள மின்சாரப் பகுதி அதிகாரி இத்தவறை சென்ற மூன்று வருடங்களாக அவதானிக்கவில்லை. இது அவரின் வேலைத் திறமைக்குறைவுக்குஓர்எடுத்துக்காட்டு. இந்தப் பகுதி 4 வருடங்களுக்கு மேலாக மீண்டும் வயர் அடிக்கப்படவில்லை. சென்ற வருடம் இப்பகுதியில் வயர் அடிக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டிருந்தது. ஆனல் கவனிக்கப்படவில்லை. சில பகுதிகளில் வயர்களே கிடையாது. சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி அக்கறை எடுத்து தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

கோட்டையிலுள்ள மின்சார இலாகாவின் கவனக் குறைவால் இந்தப் பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த இலாகாவைச் சேர்நதவர்கள் மனிதனுக்குத் தேவையானதும் உயிரைக் குடிக்கக்கூடியதுமான மின்சாரத்துக்குப் பொறுப்பாளிகள் என்பதை உணர வேண்டும். இத்தகைய பொறுப்புள்ள இலாகா தனது கடமையில் அக்கறையின்மை காட்டலாகாது. இந்த இலாகாவில் சேவை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ச்சியுடன் தமது கடமைகளை பூரணமாக நிறைவேற்றியிருந்தால் இந்தவித துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திராது. இந்தச்சம்பவம், அக்கறையின்மையால் அவர்கள் சேவை செய்யும் பொது மக்களின் உயிர்களுக்கு எவ்வித அபாயம் ஏற்படும் என்பதை மின்சார இலாகாவுக்கு எடுத்துக் காட்டுகிறது. இவ்வித கோர சம்பவம் இனிமேல் நிகழாமல் நடவடிக்கை எடுக்கப்படுமென நான் நம்புகின்றேன்.

தற்செயலாக நிகழ்ந்த மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது

---

# 'சதித்திட்ட மெதையும் யு. என். பி. எதிர்க்கும்

## ஜே. ஆர். ஜயவர்த்தன விளக்கம்

கொரும்பு, செவ்வாய் "பத்திரிகைகளை எடுத்துக் கொள்ளப் போவதாக அரசாங்கம் பயமுறுத்துகிறது. அவசரகாலநிலைமை சுமார் ஒரு வருடகாலமாக இலங்கையை இறுக்கிப் பிடித்திருக்கிறது. இன்னும் நீதிபரிபாலனத்திலும் அரசாங்கம் தலையிடத் தொடங்கியுள்ளது இவை சர்வாதிகாரத்தின் அறிகுறிகளே" என திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன யு. என். பி. யைச் சேர்ந்த கிராமசபை அங்கத்தவர்களின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை தேர்தல் மூலமாக வன்றி வேறுவகையாக வீழ்த்துவதை யு. என். பி. உண்மையாக எதிர்க்கும். எனவே இப்போதுள்ள அரசாங்கத்தை வீழ்த்த ஏதேனும் சதி நடந்திருந்தால் அதையும் யு. என். பி, எதிர்த்தே தீரும்.

சதித் திட்டத்தின் மூலம் அரசாங்கத்தை வீழ்த்திஞல் இங்குள்ள ஜனநாயக ஸ்தாபனங்களே அதஞல் பெரிதும் பாதிக்கப்படும். இந்தக் கருத்தை பார்லிமெண்டிலும் எடுத்துரைக்க எண்ணியுள்ளேன்.

சதித்திட்டத்தை யு. என். பி. மறைமுகமாக நடத்துகிறது என பொதுமக்களிடையே தவருன கருத்து பரப்பப் படுகிறது.

அரசாங்க கட்சியின் பத்திரிகையான 'சிங்கள' யு. என். பி. இந்த சதித்திட்டத்துக்கு மறைமுகமாக நின்று செயலாற்றுகிறது என தெரிவித்துள்ளது. பத்திரிகை தணிக்கை இந்த பத்திரிகைக்கும் 'ட்றிபியூன்' பத்திரிகைக்கும் கிடையாது போலத் தோன்றுகிறது. இதுபற்றியும் நான் பார்லிமெண்டில் கேட்கவிருக்கிறேன்.

யு. என். பி. யைச் சேர்ந்தவர்கள் சிறையிலடைக்கப்பட்டால் நான் அதை ஆட்சேபிப்பேன். அவ்வித நிலைமை ஏற்படாதவாறு நாம் என்றும் கண்காணிப்புடன் இருந்து கொள்ளவேண்டும்.

திரு. டி. வி. டபிள்யு. கன்னங்கரா தமது தலைமையுரையில் கூறியதாவது:

கிராமசபை திருத்த சட்டத்திஞல் ஸ்தலஸ்தாபன மந்திரி கிராமசபைகள் அனுபவித்து வந்த உரிமைகளைப் பறித்துக் கொண்டார். எந்த கிராமசபையையும் கலைப்பதற்கு இன்று மந்திரிக்கு உரிமை உண்டு.

கிராம மக்களுக்கோ அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கோ தமது கிராமங்களை சீர்திருத்துவதற்கு போதிய உரிமை கிடையாது. நிர்வாகத்தில் இதே கதிதான்.

திரு. எல்மன்பீரிஸ் பேசியதாவது:

இந்த அரசாங்கம் மக்களின் அரசாங்கம் எனத் தன்னைக் கூறிக்கொள்கிறது. ஆனல் உண்மையாக சர்வாதிகார முறையையே இது கையாள்கிறது.

கடந்த 10 வருடங்களாக நாட்டின் நிர்வாகம் முதலாளி வர்க்கத்தினரைக் கொண்ட ஒரு கூட்டத்திஞல் நடாத்தப் பட்டு வருகிறது. தாமே செய்யும் தவறுகளுக்கு அரசாங்கம் யு. என். பி. மீதும் கத்தோலிக்கர் மீதும் குற்றம் சாட்டுவது அர்த்தமற்றது.

திரு. எ. ஜி. டபிள்யு. செனிவரத்ன கூறியதாவது:

கிராமசபை பிரதிநிதிகள் கொழும்புக்கு அலுவலக வேலையாக வந்தால் பெரும் பெரும் தொல்லைகளை அடையவேண்டியுள்ளது. கடந்த இருபது வருடங்களாக இந்தநிலை சீர் செய்யப்பட வில்லை.

---

# எமது பணம்

இலங்கை ரூபாய்களின் வெளிநாட்டுப் பணமதிப்பு விகித அட்டவணை வருமாறு:-

| நாடு | | சமமான இலங்கைப்பணம் ரு. ச. |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | —பவுண்ட் — | 10-71 |
| பெல்ஜியம் | —பிராங்க் — | 00-095 |
| பர்மா | — கியாத் — | 1-00 |
| கனடா | — டாலர் — | 4-57 |
| செக்கோஸ்லேவேகியா | — கோஞய் — | 00-66138 |
| டென்மார்க் | — குரோனர் — | 00-68897 |
| பிரான்ஸ் | — பெரியபிரஞ்சுபிராங்க்— | 00-967 |
| ஜெர்மனி | — மார்க் — | 1-19 |
| ஹாங்காங் | — டாலர் — | 00-83 |
| ஒல்லாந்து | — புளோரின் — | 1-32 |
| இந்தியா | — ரூபாய் — | 1-00 |
| இத்தாலி | — லைரா — | 00-008 |
| ஜப்பான் | — யென் — | 00-01342 |
| மலாயா | — டாலர் — | 1-58 |
| நியூசிலாந்து | — பவுண்ட் — | 13-24 |
| நோர்வே | — குரோனர் — | 00-66641 |
| பாகிஸ்தான் | —ரூபாய் — | 1-00 |
| பிலிப்பைன் | — பேசோ — | 2-38 |
| தென் ஆபிரிக்கா | — ருண்ட் — | 6-70 |
| சுவிடன் | — குரோனர் — | 00-9[illegible] |
| சுவிற்ஸர்லாந்து | — பிராங்க் — | 1-10 |
| பிரிட்டன் | — பவுண்ட் — | 13-38 |
| அமெரிக்கா | — டாலர் — | 4-77 |

1962-ம் ஆண்டு 9-ம் நாளிலிருந்து இந்த விகிதமுறை அமுலிலிருக்குமென நிதிமந்திரி அறிவித்திருக்கிருர்.

---

## அன்புள்ள மாலதி:::

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

யும் உயர்ந்த லட்சியங்களையும் ஏற்படுத்தச் செய்வதிலேயே எமது திறமை தங்கியிருக்கிறது. என்பதை மறந்து விடாதே. இதுபற்றி எங்கள் ஆசிரியை புனிதவதியார் அடிக்கடி கூறும் போதெல்லாம் எனக்குப் புதியதெம்பொன்று பிறப்பதை நீயே பலமுறை சுட்டிக் காட்டியுள்ளாய். தூய எண்ணங்களையும், உயர்ந்த லட்சியங்களையும் ஏற்படுத்த பெரியார் வரலாறுகளை குழந்தைகளுக்கு நல்ல முறையில் சொல்லிக்கொடுப்பது சிறந்த வழியாகும்.

இதற்கு பெண்ணினம் உலகப் படைப்பையும் பெரியார்களைப் பற்றியும் அறிந்திருந்து மனப்பாடமாக ஒப்புவித்தால் மட்டும் போதாதென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த நோக்கம் நிறைவேறச் சிறந்த பாதை எது? உனது சிந்தனைகளையும் தெரிவிப்பாய் என நம்புகிறேன். மறு கடிதத்தில் விபரமாக எழுதுகிறேன்.

உனது அன்புள்ள
கிருஷ்ணவேணி.

---

யாழ்ப்பாணம், செவ்வாய் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரி உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக சங்கானைப் பட்டினசபைத்தலைவர் திரு.நா. முத்தையா நியமிக்கப்பட்டுள்ளாரென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# மங்கையர் உலகம்



## சமையல் தெரியாத பெண்ணுக்கு

### கல்யாணத்தடை பிறப்பித்து தீர்ப்பு

சமைக்கத் தெரியாத பெண் திருமணம் செய்து கொள்வதற்கு மாஜிஸ்திரேட் தடை விதித்த அபூர்வசம்பவம் லண்டனிலுள்ளபோக்ஸ்டோன் நகரில் சமீபத்தில் நிகழ்ந்தது.

பார்பரா என்ற 19 வயது மங்கை எரிக்கோல்ட் சாக் என்ற 19 வயது வாலிபனை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தாள். சமைக்கத் தெரியாத பெண் இப்போது திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை நடத்தமுடியாது என்று காரணம் காட்டி அவளுடைய தகப்பனார் இந்தத் திருமணத்திற்கு அனுமதி கொடுக்கமறுத்தார். இதனால் தகப்பனுக்கும் மகளுக்கும் தகராறு முற்றி நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்தமாஜிஸ்திரேட் மணமகள் நல்ல சுவையான உணவு சமைக்க கற்றுக்கொண்டால் தான் திருமணத்துக்கு அனுமதி கொடுக்கமுடியும் என்றும் இவ்விதம் சமையல் கலையில் பயிற்சி பெற 3 மாத தவணை கொடுப்பதாகவும் தீர்ப்பளித்தார்.

# நகை அலங்காரமும் கலை வளர்ச்சியும்

நகை என்றால் பெண்களுக்கு அலாதி பிரியம். படித்த பெண், பட்டிக்காட்டுப் பெண், பண்புள்ள பெண் எவரும் சரி, பெண்கள் என்றால் நகைப் பிரியர்களே. ஒரு சில பெண்கள் நகைகளைத் தாம் அணிந்து கொள்வதை விரும்பாவிட்டாலும் பிற பெண்கள் அணிந்திருப்பதைப் பார்த்து மகிழ்வார்கள். தங்க நகைகளை அணிவதிலும் அழகு பார்ப்பதிலும் தமிழ் நாட்டுப் பெண்களுக்குத் தனி விருப்பமுண்டு.

நகைகளை அணிந்து கொள்ளும் பழக்கத்தால் அழகும் அபிமானமும் பாதுகாக்கப்படுவதோடு, அது ஒரு சேமிப்புச் சாதனமாகவும் கலை வளர்ச்சிச் சாதனமாகவும் அமைகிறது. வங்கிகளிலும் சேமிப்பு நிதிகளிலும் பணத்தைப் போட்டு வைப்பது போலவே தங்க நகைகளை வாங்கி உபயோகிப்பதிலும் பணம் முதலீடு செய்யப்பட்டு சேமிக்கப்படுகின்றது. தமிழ் நாட்டவர் தங்க நகையணிந்து கொள்ளும் பழக்கத்தைத் தமிழ் நாட்டவரின் ஒரு அரிய சேமிப்பு முறையெனப் பிறநாட்டவர்களும் போற்றியுள்ளார்கள்.

நுண் கலைவளர்ச்சிக்கும் பழைய கலையின் மகத்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும் நகையணியும் பழக்கம் உதவுகின்றதல்லவா? நகைகளின் சிற்ப வேலைப்பாடுகள் காலத்துக்குக் காலம் நாகரிகத்துக்கேற்ப மாற்றப்படுவதால் நுண்கலை வளர்ச்சியடைகிறதல்லவா? நாகரிகத்துக்கேற்ற நகையணியும் பெண்கள்தான் இந்த நுண்கலை வளர்ச்சிக்குக் காரணமாகவிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

பண்பாட்டிற்கேற்ற நகைகளைப் பெண்கள் அணிந்து கொள்வதைப் பெரியார்களும் ஏற்றுக்கொள்வார்கள் எனினும் இடத்துக்கும் வைபவத்துக்கும் ஏற்ப நகைகளை அணிந்துகொள்வதையே சகலரும் வரவேற்றுக்கொள்வர். சாதாரண அலுவல்களுக்காக வீட்டிலிருந்து புறப்படும்பொழுது விலையுயர்ந்த நகைகளைச் சிலர் அணிந்து செல்வதால் பிறர் பார்த்து நகைப்பதற்கு இது இடமளித்து விடுகிறது. சில தமிழ்ப் பெண்களிடம் காணப்படும் பெருங்குறை இது எனத் திடமாகச் சொல்லிவிடலாம். ஆஸ்பத்திரிகள், கடைத் தெருக்கள், காரியாலயங்களுக்குச் செல்லும் போதும் 'நெக்லஸ்' போன்ற பெரிய நகைகளை அணிந்து செல்லும் சில பெண்கள் நகைக்குக்கொடுக்கவேண்டிய மதிப்பைக் குறைத்துவிடுகிறார்கள் எனலாம். எளிய உடைகள் அணியும்போது எளிய நகைகளை அணிந்து செல்வதே அழகு. இடத்துக்கும் வைபவத்துக்கு மேற்ப நகைகளை அணியப் பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

## வள்ளியம்மையின் தியாகம்

"பலருடைய சிறைவாசம் பயனற்றுப்போயிருக்கலாம். ஆனால் ஒரு தூய்மையான ஆன்மாவின் பக்தியுள்ள தியாகம் ஒருபோதும் வீண் போகாது. தென்னாப்பிரிக்காவில் எவருடைய தியாகமும் ஆண்டவனுக்கு உகந்ததாய் இருந்து பலனளித்தது என்று ஒருவரும் சொல்லமுடியாது. ஆனால் வள்ளியம்மையின் தியாகமும், மற்றச் சகோதரிகளின் தியாகமும் பயனைப்பெற்றன என்பது நிச்சயம்." —சத்தியசோதனையில் காந்திஜி.

கடிதம் 7

## அன்புள்ள மாலதிக்கு,

உலகப் பெரியார்களைப் பற்றியும் நாட்டு வரலாறுகளையும் பெண்கள் குடும்பக்கலையுடன் தெரிந்திருப்பது நல்லது என்று சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். இது ஆண்களுக்கு விதிவிலக்கா என்று கேட்டிருக்கிறாய். மனித குலம் முழுமைக்கும் இவைகள் நல்ல வழிகாட்டிகள். தோன்றாத் துணைகள் என்பதை மறந்து விடாதே. இவைகளைப் பெண்கள் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டுமென்பது எனது விருப்பம்.

பலருமைய வாழ்க்கையைச் செப்பனிட்ட பெருமையும் சக்தியும் பல பெரியார்கள் வரலாற்றுக்கு உண்டு. வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெறும் நிலைக்கு உயர்ந்த மனித மாணிக்கங்களின் வரலாறுகள் நல்ல மனிதர்களை சிறந்த தலைவர்களை, நாட்டுக்கு ஏற்ற நல்ல நங்கைகளை, வீரர்களை உற்பத்தி செய்துதரும் ஆற்றல் வாய்ந்தவை. எண்ணம் என்னும் அத்திவாரத்தில் நாம் வாழ்வு என்னும் வீடுகட்டுகிறோம். எண்ணம் எப்படியோ வாழ்வும் அப்படியே நமக்கு வந்தமைகிறது. இந்த அத்திவாரத்தை அமைக்கும் ஆற்றல் இவர்களின் வரலாற்றுக்கு உண்டு. இந்த அத்திவாரத்தை இளம் உள்ளங்களில் அமைத்துக் கொடுக்கும் பணி பெண்ணினத்தினால்தான் செய்யப்பட வேண்டும். தாய் முலைப்பாலுடன் வீரம், தியாக உணர்ச்சி, மனிதப்பண்பு ஆகிய சிறந்த வாழ்க்கை அம்சங்களையெல்லாம் தான் படைத்த எதிர்கால உலகத்திற்கு ஊட்டி வளர்ப்பவள் தாய்மை நிறைந்த பெண்ணல்லவா? அதனால் தான் பெண்ணினம் மேதைகளைப் பற்றியும், பெரியார்களைப் பற்றியும், அறிந்திருக்க வேண்டியது அவசியமென்று சொல்லுகிறேன்.

எதிர்காலத்தில் எண்ணிறந்த மேதைகளையும், மனித மாணிக்கங்களையும் ஆக்கி அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு எமது இனத்தின் கையில் எப்பொழுதும் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்கு இத்தகைய வரலாறுகளை நாம் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவர்கள் மனதில் அத்தகையோரின் வரலாறுகளைப் பதிய வைத்து மீண்டும் அத்தகையவர்களைத் தோற்றுவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

'இளமையில் கல்வி முதுமையில் எழுத்து' என்பது அமுத வாக்காகும். இளம் உள்ளங்களில் தூய எண்ணங்களை

(5-ம்பக்கம் பார்க்க)

## தக்காளி சூப்

"உமை"

காய்கறி, கீரை, கிழங்கு முதலியவற்றை நன்றாக வேக வைத்து அவற்றிலுள்ள வைடமின் சத்துக்கள் வீணாகாமல், பக்குவம் செய்து உண்பது உடலுக்கு நல்லது. சாதாரணமாக வீடுகளில் பல பெண்மணிகள் இவற்றை அளவுக்குமிஞ்சிய நீரைவிட்டு நன்றாக வேகவைத்தும் மிஞ்சியநீரை வெளியிற் கொட்டியும் அவற்றிலுள்ள தேவையான சத்தை வீணாக்கி விடுகிறார்கள்.

காய்கறிகளைக் கொண்டு சூப் தயாரித்துக்குடிப்பது உடலுக்கு ஆரோக்கியத்தை அளிப்பதுடன் நாம் அவற்றிலுள்ள சத்துக்களைப் பெறவும் முடிகிறது.

சுவையில் எளிய முறையில் தயாரிக்கக் கூடியதும் சத்து வாய்ந்ததுமான தக்காளி சூப் செய்யும் முறை இங்கேகொடுக்கப்பட்டுள்ளது.

நன்கு பழுத்த தக்காளிப் பழம் 1/2 வீசை.

நடுத்தர அளவுள்ள காரட் அல்லது 1.

பெரியவெங்காயம் 1.


மார்கரீன் அல்லது வெண்ணெய்–2 மேசைக்கரண்டி.

பொடி செய்த மிளகு 2 தேக்கரண்டி.

ருசிக்குத் தேவையான அளவு உப்பு.

தக்காளி, காரட் முதலியவற்றை நன்றாக நீரில் கழுவி கரட்கிழங்கை பொடியாக நறுக்கவேண்டும். வெங்காயத்தையும் அரிந்துவைக்கவேண்டும். ஈயம்பூசிய பாத்திரத்தில் மார்கரீன் அல்லது வெண்ணெயை விட்டு அடுப்பில் வைத்து காய்ந்ததும், நறுக்கி வைத்துள்ள காரட் வெங்காயம் இரண்டையும் சேர்த்து வதக்கவேண்டும். சற்றுலேசாக வதங்கினால் போதும். பின்பு சிறுதுண்டுகளாக நறுக்கிய தக்காளிப் பழங்களைப்போட்டு நான்கு ஐந்து தம்ளர் சுத்தமான வெந்நீர் ஊற்றுக. உப்பு, சிறிதளவு சர்க்கரை, மிளகுப் பொடி. இவற்றைப் போடுக உப்பும் மிளகும் சற்று உறைப்பாக இருந்தால் நல்லது. காட் தக்காளி இரண்டும் வெந்தவுடன் சூப்பை அடுப்பினின்றும் இறக்க, துணியில் ஊற்றி வடிகட்டவும். நீர்முழுவதும் இறங்கும்படி கரண்டியால் மசித்துவிடவேண்டும்.

நான்கு மேசைக் கரண்டி குளிர்ந்தபால் அல்லது நீரில் கஸ்ராட் பவுடரையோ அல்லது மாவையோ கரைத்து வடிகட்டிய சூப்புடன் கலக்க வேண்டும். இது சூப்பை சற்று கெட்டியாக இருக்கச் செய்கிறது. அத்துடன் ருசியையும் அதிகரிக்கச் செய்கிறது. சூப்பை மீண்டும் பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து கரண்டியால் அலசிக்கொண்டே சில நிமிடம் வரை கொதிக்க வைத்துப் பின் இறக்கிவிட வேண்டும்.

ஒரு முறை அருந்தி




என்றும் விரும்பும் நற்பானத்தைப் பெறுங்கள்




அது நற்சுவையில் தலைசிறந்தது: அதன் மேலதிக இனிமையையும், பாலேடையின் சுவையையும், நீங்கள் விரும்புவீர்கள்! வேறெந்த மோல்டட் பாலும் இவ்வளவு சுவையாக இல்லை என்று நீங்களே சொல்வீர்கள்!

அது ஒரு நொடியில் கரைகிறது: ஸல் போட்டவுடன் கரைந்து விடுகிறது! ... சிறு கரண்டியளவு ஒரு கப் தண்ணீரில் போட்டதும் மிகவும் ருசியான ... பானம் தயாராகி விடுகிறது!

... அல்லது கோப்பியின் சுவையை உயர்த்துகிறது: பாலுக்குப் பதிலாக ... உபயோகித்து ஒரு புதிய சுவை இன்பத்தைப் பெறுங்கள்...அது மனக்கிளர்ச்சி ... அனுபவம்!

அது சிக்கனமானது: முதலாவது அதன் விலை மிக மிக மலிவு. மேலும், உங்களுக்குப் பால் லாபம், சீனி லாபம். எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் ஸல் உங்களுக்கு உற்ற நண்பன்!

ஸல்லை பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்

ஸல்

உடன் கரையும் மோல்டட் பால்

குடும்பத்தார் உடன் விரும்புவது

AVT-HLS-2963

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

புதன் 14-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 பாங்கு, 6-45 ஜலதரங்கம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-50 பி. எஸ். மணிஐயங்கார்-வீணை, 8-00 'முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விவாதமேடை, 9-45 குரல்வகை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 கோயமுத்தூர் டி. பி. ஏ. முத்துக்குமாரஸ்வாமி - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பேச்சு, 7-45 'இரகசியம்' - நாடகம், 8-00 கோயமுத்தூர் டி. பி. ஏ. முத்துக்குமாரஸ்வாமி - வீணை, 8-30 திரைப்படஇசை, 9-15 நல்லுரை, 9-50 இசைமாலை.

## மருந்துகள் தட்டுப்பாடு

முள்ளியவளை, செவ்

மதவாச்சி - மன்னார் வீதியில் மதவாச்சியிலிருந்து 8 மைல் தூரத்தில் மாங்குளத்திலுள்ள டிஸ்பென்சரியில், அத்தியாவசிய மருந்துகளுக்கும், ஊசி மருந்துகளுக்கும் தட்டுப்பாடேற்பட்டுள்ளதால், அப்பகுதி நோயாளர் பெரிதும் அவதியுற வேண்டியுள்ளதாகப் புகார் செய்கின்றனர்.

## வவனியாவில் அம்மைப்பால்

முள்ளியவளை, செவ்

வவனியாப் பட்டினத்தையடுத்த பகுதிகளில், அம்மைப்பால் கட்டும் இயக்கத்தை, சுகாதார வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

## ஸ்ரீ ஐயனார் கோவில் திருப்பணிச் சங்கம்

முள்ளியவளை, செவ்வாய்

முகத்தான்குளம் ஸ்ரீ ஐயனார் கோவில் திருப்பணிச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பூசினிப்பிட்டி ஸ்ரீ ஐயனார் கோவில் மைதானத்தில் திரு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போது கீழ்க்கண்ட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. டி. முருகேசபிள்ளை (காரியாதிகாரி). உபதலைவர்: திரு. ஏ. வி. கணபதிப்பிள்ளை. செயலாளர்: திரு. நா. கந்தையா, துணைச் செயலாளர்: திரு. கி. கெங்கேஸ்வரன். பொருளாளர்: திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை.

பஞ்சாயத்து சபை உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

திருவாளர்கள்: அ. முத்துக்குமாரு, சி. கிருஷ்ணபிள்ளை, மூ.ச. கந்தையா, நா. கந்தையா, ஆ. கணபதிப்பிள்ளை.

---

முள்ளியவளை, செவ்வாய்

வித்தியானந்தக் கல்லூரியின் பொதுவிஞ்ஞான ஆய்வுச் சாலைக்குள் சென்ற மாணவரும் ஆசிரியரும், பெரியதொரு புடையன் பாம்பை அங்குள்ள அலமாரியின் மேல் கண்டனர். பாம்பு உயிர் தப்பவில்லை!

## உங்கள் வாய்ப்புக்கள்

### யாழ். தொழில் நுட்ப கலாசாலை

யாழ்ப்பாணம் கனிஷ்ட்ட தொழில் நுட்பக்கலாசாலையில் நடத்தப்படவிருக்கும் பின்வரும் பயிற்சிகளில் சேர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மோட்டார் பொறியியக்கம். 2. உலோக வேலை, 3. மரவேலை. 4. மின்சாரக்கம்பி இணைத்தல், (தமிழ்). 5. கணக்குப்பதிவியல்(தமிழ்-ஆங்கிலம்). 6. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்-ஆங்கிலம்). 7. கட்டட அமைப்பு (தமிழ்). 8. சுருக்கெழுத்தாளர் தகுதிப் பத்திர வகுப்பு (தமிழ்-ஆங்கிலம்). 9. எந்திரவியல் விஞ்ஞான ஆரம்ப வகுப்பு (ஆங்கிலம்). 10. பொறிமுறை எந்திரவியல் (ஆங்கிலம்). 11. மின்சார எந்திரவியல் (ஆங்கிலம்). 12. அளத்தலும் மட்டம் பார்த்தலும் (ஆங்கிலம்). 13. கட்டட அமைப்பு (ஆங்கிலம்).

இப் பயிற்சி வகுப்புகளிற் சேரவிரும்புவோர் மார்ச்மாதம் 16-ம் திகதிக்கு முதல் யாழ்ப்பாணம் தொழில்நுட்ப பாடசாலையிலிருந்து வேண்டிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட மார்ச் 17-ம் திகதிக்கு முதல் அதிபர், கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலை யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மேலதிக விபரங்கள் பெப்ரவரி 9-ம் திகதி வெளியாகிய அரசாங்க வர்த்தகமானிப் பத்திரிகையிலிருந்து பெறப்படலாம்.

### நிர்வாகி இலங்கைக் கைத் தொழிலகம்

25 வயதுக்கு மேற்பட்ட 45 வயதுக்குட்பட்ட லண்டன் இண்டர் மீடியட் தராதரப் பட்டம் பெற்றோரிடமிருந்து இப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஜீ. சி ஈ. உயர் தராதரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்தியவர்களும் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் குறிப்பிட்ட மூன்று பாடங்களுடன் சித்தி பெற்றவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்பப் பத்திரமும் விபரங்களும் பெப்ரவரி 9-ம் திகதி வர்த்தகமானியில் வெளியாகியுள்ளன.

---

கிரிக்கட்

## எவருக்கும் வெற்றியின்றி முடிவு

தெல்லிப் பழை, செவ்வாய்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகத்திற்கும் கண்டிக்குளி யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

உதயதாரகை மன்றக் கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 162 ஓட்டங்களைப் பெற்றது. கண்டிக்குளி யங்ஸ்டார் கோஷ்டி முதல் இன்னிங்சில் 82 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து விளையாடி இரண்டாம் இன்னிங்சில் 3 விக்கட் நஷ்டத்திற்கு 99 ஓட்டங்கள் எடுத்தது. இப் போட்டி குரும்பசிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## எழுத்தாளர்களின் கூட்டுறவு இயக்கம்

கண்டி, செவ்வாய்

'எழுத்தாளர்களைக்கொண்ட ஒரு குழு புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது இலக்கிய வளர்ச்சிக்கு மிக உகந்த ஒரு சேவை எனலாம்' என கண்டி கூட்டுறவுஅபிவிருத்தி இலாகா உதவிக் கமிஷனர் திரு. எச். பி. வீரரத்தின கூட்றடுவு வெளியீட்டுச் சங்கத்தின் ஆரம்பவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கண்டி அரசாங்க கலாநிலையக் கட்டடத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வீரரத்தின பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் பலவல்லமை படைத்த நல்ல எழுத்தாளர்கள் இருந்தும் பணநிலைமை காரணமாக புத்தக வெளியீடு மிகவும் சிரமமானதொரு காரியமாகவிருக்கிறது. எழுத்தாளர்கள் ஒன்றுகூடி கூட்டுறவு இயக்கங்களை வளர்ப்பதால் இவ்வித பணநெருக்கடியைச் சமாளிக்கலாம். இது சம்பந்தமாக அரசாங்கம் தன்னலான உதவியைச் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பேனென உறுதி கூறுகின்றேன்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த கம்பொலை வித்தியாலய அதிபர் திரு. எச். எம். சுமதிபாலா பேசுகையில் எழுத்தாளர்கள் தாம் எடுத்துக்கொண்ட முயற்சியை துணிவுடனும் உறுதியுடனும் செயலாற்ற வேண்டும்.

## இருவருக்கு அம்மை நோய்

கொழும்பு, செவ்வாய்

வெலிவெரியாவுக்கு அப்பால் உள்ள உருவெலாப் பகுதியில் இருவருக்குப் பெரியம்மை நோய் கண்டிருந்தது.

கே. ஏ. பியசிறி என்னும் பதினொரு வயதுச் சிறுவன் சுகவீனம் காரணமாக கம்பஹாவிலுள்ள தனிப்பட்ட வைத்தியசாலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தான். சிறுவனைப்பரிசோதனைசெய்த வைத்தியர் கொழும்பிலுள்ள லேடிரிட்ஜ்வே ஆஸ்பத்திரிக்குச் சிறுவனை அழைத்துச் செல்லுமாறு கூறினர். லேடிரிட்ஜ்வே ஆஸ்பத்திரியிலிருந்து தொற்றுநோயாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பிரேமசிறி சில நேரத்தில் மரணமானர். பிரேத பரிசோதனையின்போது அவர் பெரியம்மை நோயினுல் மரணமானுர் எனத் தெரியவந்தது.

பிரேமசிறியுடன் தொடர்பு கொண்டிருந்த அனைவருக்கும் பெரியம்மை தடுப்பு பால் குத்தப்பட்டது. உருவெலாப்பகுதியிலுள்ள அனைவருக்கும் பின்னர் நோய் தடுப்புப்பால் குத்தப்பட்டது. மூன்று மணித்தியால நேரத்தில் வெலிவெரியாவிலுள்ள 800 பேர்களுக்கும் பால் குத்தப்பட்டது.

கொழும்பு அரசாங்க ஆஸ்பத்திரியின் 24 வது வார்ட்டில் ஒரு நோயாளிக்குப் பெரியம்மை கண்டிருந்தது. இது காரணமாக வார்ட்டிலிருந்து வெளியேறக்கூடிய நோயாளிகள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பப் பட்டனர். ஆஸ்பத்திரி வார்ட்டில் வேறெவருக்கும் நோய் கண்டதாகத் தெரியவில்லை.

## றேமாஸ் கிளப் வெற்றி

வவனியா, திங்கள்

வவனியா சுபாஸ் கைப்பந்தாட்டக் கோஷ்டியினருக்கும் வவனியா றேமாஸ் கழகக் கோஷ்டியினருக்கும் ஓர்சினேகபூர்வமான கரபந்தாட்டம் றேமாஸ் மைதானத்தில் நடைபெற்றது. இவ்வாட்டத்தில் றேமாஸ் கிளப் கோஷ்டியினர் 13—15, 15—8, 15—9-ல் வெற்றிபெற்றனர்.


# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனுல் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரெஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரு. 1-20 | ரு. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

**அப்பியாச புத்தக ரகங்கள்:**

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரெஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சதவீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்

போன்: 94040.

6, அல்பேட்க்ரெசன்ட், கொழும்பு 7.

# 19-ந் திகதி யாழ்ப்பாணம் மேயர் தெரிவு நடைபெறும்

## முன்னுள் மேயர் ஒருவரும் போட்டியிடுவார்?

யாழ்ப்பாணம், புதன் யாழப்பாணம் மாநகரசபையின் புதிய மேயர் தெரிவு இம் மாதம் 19ம் திகதி மாலை 3-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இதற்கான அறிவித்தலை கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்கா அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாண மேயராக இருந்த திரு. டி. எஸ். துரைராஜா கடந்த திங்கட்கிழமை அம் பதவியிலிருந்து ராஜினாமாச்செய்தது தெரிந்ததே. இதைத் தொடர்ந்தே புதிய மேயர் தெரிவு நடைபெறவிருக்கிறது.

சென்ருண்டு ஆரம்பத்தில் இம் மாநகரசபையின் பெரும்பான்மைக்குழு என்று கருதப்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தப்படி இரண்டாவது மேயராக இவ்வாண்டில் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தெரிவு செய்யப்படவேண்டும். ஆனல் குறிப்பிட்ட ஒப்பந்தப்படி புதிய உதவி மேயர் தேர்தலின் பின் அவ் வொப்பந்தம் சிதைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் புதிய மேயர் தேர்தலில் கையொப்பமிட்டவர்கள் அனைவரும் ஒப்பந்தப்படி நடந்துகொள்வார்களா என்பதில் பலத்த சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களுள் முன்னுள் மேயர் ஒருவரும் புதிய மேயர் தேர்தலில் போட்டிக்கு நிற்கலாமெனவும் சிறுபான்மைக் குழுவாகக் கருதப்பட்டு வந்த அங்கத்தவர்களும், பெரும்பான்மைக்குழுவில் சிலரும் இவரை ஆதரிப்பார்களென வும் சில வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

யாழ்ப்பாணம் மனோகரா கே. ஆர். ராமசாமி, பத்மினி நடித்த காஞ்சனை


5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!

இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

கே. ஆர். ராமசாமி பத்மினி

நடித்த

காஞ்சனை


## வேண்டுமானல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் முதலில் கத்தோலிக்கர்களையும், பின் ஐக்கியதேசியக்கட்சியையும் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தச்சூழ்நிலையில் தான் விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எட்டியாந்தோட்டை அங்கத்தினர் உட்பட அரசியல்கட்சித் தலைவர்கள் சபாநாயகரைச் சந்தித்த போது, நீதிமந்திரியினல் விசாரணைகள் நடத்தப்படும் முறை பற்றி அவர்கள் கண்டனம்தெரிவித்து ஆட்சேபித்துள்ளனர். விஷயம் அப்படியல்ல என்றும் பொலிஸார் நடத்தும் விசாரணையில் நீதிமந்திரி பிரசன்னமாயிருந்தார் என்றும் சபை முதல்வர் அப்போது கூறினர். ஒரு அரசியல் தலைவர் விசாரணையை நடத்துவது திருப்திகரமானதல்ல."

"எனக்கெதிராக எதுவுமிருந்தால் என்னைக் கைது செய்து விசாரியுங்கள். நான் அஞ்சவில்லை. அரசியல் கட்சிகளை ஒழிப்பதற்காக இச் சதியை நீதிமந்திரி பயன்படுத்திக் கொள்ள முயல்கிருர் என்பதைத் தேசம் அறியும் என்பதால் நான் சந்தோஷமடைகிறேன். உங்கள் கண்முன்னலேயே சதி நடைபெறுகிறது. அதையும் பின்னல் அறியலாம். அது கத்தோலிக்கர்களே. ஒன்றன்பின் ஒன்ருகக் கைதுசெய்யப்பட்ட அனைவரும் பௌத்தர்கள் அல்லாதார்களே. ஆனல் ராணுவத்திலும், கடற்படை, விமானப்படை, பொலிஸ்படை ஆகியவற்றிலும் பெரும்பான்மையாக பொத்தர்கள் இருக்கும்போது அவர்கள் இல்லாமல் இவ்வாறு ஒரு சதி நடைபெற்றது என்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. அரசாங்க ஊழியர்களில் பெரும்பான்மையினரும், மக்களில் பெரும்பான்மையினரும் பௌத்தர்களாய் இருக்கிருர்கள் இது கத்தோலிக்க புரட்சி என்பதைச் சிருஷ்டிப்பதே உத்தேசம். ஐக்கியதேசியக் கட்சி இங்குமங்குமுள்ள தமிழர்கள் ஆகியோர்மீதும் பழி சுமத்தப்பட்டுள்ளது.

### கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய் பரிசளிப்பு விழா

1962-ம் ஆ. (மாசி) பெப்ரவரி மாதம் 17-ந்தேதி பிற்பகல் 6மணிக்கு கனம் எஸ். யு. சோமசேகரம் உதவி வித்தியாகர்த்தரின் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். ஸ்ரீமதி எஸ். யு. சோமசேகரம் அவர்களால் பரிசில்கள் வழங்கப்படும். பெற்ருேர்கள், அன்பர்கள், அனுதாபிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

எ. சி. ஆ. நவரத்தினராசா
அதிபர்

### யாழ் விநோத கைத்தொழில் விவசாய பொருட்காட்சி - 1962

பீடா, வெற்றிலை, சோடா, சிகரட், சுருட்டு, பீடி விற்பனைச்சாலை

மேற்படி பொருட்காட்சியில் பீடா, வெற்றிலை, சோடா, சிகரட், சுருட்டு, பீடி ஆகியவையை மட்டும் விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ஆகக்கூடுதலான கேள்விதாரருக்கு இப்பொருள்கள் விற்பனை செய்யும் உரிமை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் அனுப்புவோர் 20-2-1962-ம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலம் பொருட்காட்சி அமைப்பாளருக்கு எவ்வளவு பணம் கொடுக்க முடியும் என அறிவிக்கவேண்டும்.

### சைக்கிள் வாடகை

மேற்படி பொருட்காட்சியில் சைக்கிள் பாதுகாப்பிற்கென விசேஷமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் சைக்கிள் பாதுகாப்பு உரிமை ஆகக் கூடுதலான கேள்வி தாரருக்குக் கொடுக்கப்படும். கேள்விதாரர் 20-2-1962-ம் திகதிக்கு முன்னர் பொருட்காட்சி அமைப்பாளருக்கு எவ்வளவு ரூபா தரமுடியும் என பதிவுத்தபால் மூலம் அறிவிக்கவும்.

அ. யோ. காசிப்பிள்ளை
அ. விசுவநாதன்
இணைக் காரியதரிசிகள்

பொதுசன நூல் நிலையம்,
யாழ்ப்பாணம்.

# சதித்திட்டத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட முக்கிய பங்கை அவர் விபரித்தார். திட்டம் பூர்த்தியானவுடன் இராணி மாளிகைக்குச் சென்று புதிய அரசாங்கத்தை நிறுவுமாறு கவர்னர் ஜெனரலிடம் கேட்டுக்கொள்வதென உத்தேசிக்கப்பட்டிருந்ததாம். அவர் மறுத்தால் என்ன செய்வது என்பதுபற்றி திட்டம் வகுக்கப்பட்டன என்றும் திரு. பீலிக்ஸ் கூறினர்.

சதித்திட்டம் சம்பந்தமாக ஸி. ஐ. டி. உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு எஸ். ஏ. திஸநாயகாவுக்குத் தகவல் கிடைத்தது. பின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், பிரதம மந்திரிக்கும் விஷயம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடாத்தப்பட்டது.

மேஜர் ஜெனரல் விஜயக்கூன், ஏர்வைஸ்மார்ஷல்பார்க்கர், கடற்படைத் தற்காலிக தளபதி ராஜன் கதிர்காமர், நீதிமந்திரி திரு. பீலிக்ஸ், விவசாயமந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா ஆகியோர் பிரதமரின் "டெம்பிள்டிரீஸ்" மாளிகைக்கு அழைக்கப்பட்டனர்.

ஜனவரி 27-ம் தேதி இரவு நடைபெறுவதாக இருந்த இச் சதித்திட்டத்தில் கர்னல் மொரிஸ் டி. மெல், கர்னல் எப். ஸி. டி' சேரம் ஆகியோர் ராணுவத்துக்குப் பொறுப்பாயிருந்தனர்.

திரு. ஸி. ஸி திஸ்ஸநாயக்கா (டி. ஐ. ஜி) திரு சிட்னி டி' சொய்ஸா ஆகியோர் பொலிஸுக்குப் பொறுப்பாயிருந்தனர்.

ராணுவம், பொலிஸ் இரண்டையும் இணைத்துச் செயலாற்றும் பொறுப்புக்கு திரு. சிட்னி டி' சொய்சா பொறுப்பாயிருந்தார். அவருடன் முழுத் திட்டத்துக்கும் பொறுப்பாக ராய்ஸ் டி மெல் இருந்தார்.

மந்திரிமார்கள், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஸி. ஐ. டி. உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஸி. ஐ. டி. சுப்ரிண்டன், இடதுசாரித் தலைவர்கள் ஆகியோரைக் கைது செய்வதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. பல ராணுவ தலைவர்களை வீட்டைவிட்டு வெளியே வராமல் தடுப்பது, கொழும்பில் கைது செய்பவர்களை ராணுவ தலைமைக் காரியாலயத்திலுள்ள நிலவறையிலும், வெளியே கைது செய்யப்படுபவர்களை ஆங்காங்குள்ள பொலிஸ நிலையங்களிலும் காவலில் வைப்பது;

மத்திய தந்திக் கந்தோர், டெலிபோன் இணைப்புக் காரியாலயங்கள், பத்திரிகைக் காரியாலயங்கள், பொலிஸ தலைமைக் காரியாலயங்கள், ஸி. ஐ. டி. காரியாலயம் ஆகியவற்றைக் கைப்பற்றுதல்;

முக்கிய இடங்களில் டாங்கிகளையும் கவச மோட்டார்களையும் நிறுதததல்;

பனகொடையிலுள்ள துருப்புக்களை கொழும்புக்கு வராமல் தடுப்பது;

களனி, கிரிலப்பனை பாலங்களிலும் இதர முக்கிய இடங்களிலும் ராணுவ வாகனங்களை நிறுத்துதல்;

லுனைவயிலுள்ள கர்னல் ரிச்சார்ட் உடுகமையின் இல்லத்தைக் காவல் செய்வது;

ஒவ்வொருவரையும் கைது செய்ய யார் யாரை நியமிப்பது என்ற விஷயமும் முடிவு செய்யப்பட்டது.

தானும், திரு ஸி. ஸி. திஸநாயகா டி. ஐ. ஜி., முன்னுள் கடற்படை தலைவர் ராய்ஸ் டி மெல் ஆகியோரும் அரசாங்கத்தை வீழ்த்த திட்டமிட்டதாயும், கவர்னர் ஜெனரலின் தலைமையில் இவ்வாறு நடைபெறுவதாயும் திரு. சிட்னி டி சொய்ஸா ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதாய்த் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பற்றுள்ளவர்களால் தான் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும், சிறிது காலம் ராணுவ சர்வாதிகாரத்துக்குப் பின் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரைக் கொண்டு அரசாங்கம் அமைக்கப்படும் என்றும், திட்டத்துக்கு முழுப் பொறுப்பும் தானே என்றும், தனது கட்டளைப்படியே அனைவரும் செயலாற்றுவதாகவும் கர்னல் எப். ஸி. டி சேரம் கூறியதாயும் தெரிவிக்கப்பட்டது. கவர்னர் ஜெனரலுடன் இவ் விஷயமாகத் தொடர்பு கிடையாதென்றும், ஆனல் திட்டம் பூர்த்தியானவுடன் அவரது ஒத்துழைப்பைக் கோர முடிவு செய்யப்பட்டதென்றும், மற்றும் பல கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டதாயும் கூறப்பட்டது.

இத்திட்டத்தின்படி நடக்க பல பொலிஸ் நிலையங்கள் தயாராய் இருந்தன என்றும், உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸி ஸி. திஸநாகாவின் காரியாலய குப்பைக் கூடையிலிருந்து எரிப்பதற்காகக் கொண்டு செல்லப்பட்ட காகிதங்களில் திட்டம்பற்றிய விபரம் இருந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது.

"டைம்ஸ்" பத்திரிகையில் வேலைசெய்த திரு. சிட்னி டி. சொய்சா 5 நாள் விடுமுறை எடுத்துக்கொண்டு களுத்துறை வரை சென்ருரென்றும், பல பொலிஸ் அதிகாரிகளுடன் இது பற்றிப் பேசினர் என்றும், இரகசியத்தை வெளியிட்டால் அவர்கள் கொலைசெய்யப்படுவார்கள் எனப் பயமுறுத்தியதாயும் அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 27ம் திகதி பிரதமர் கதிர்காமத்திற்குச் செல்லவிருந்ததாயும், அதேதருணம் சதித்திட்டக்காரர்கள் பலர் அங்கு சென்றிருந்ததுடன், பிரதமர் வந்தால் திரும்பிப் போக மாட்டார் என அவர்களில் ஒருவர் கூறியதாயும் அறிவிக்கப்பட்டது.

## குற்றவாளிகளுக்கு..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா வாசித்தார்.

சதித்திட்டம் சம்பந்தமாக அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலித்து வருவதுடன் அதைப் பாரதூரமாக அரசாங்கம் கருதுகிறதென்றும் திரு. பீலிக்ஸின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

"ராணுவத்திலும், பொலிஸிலும் உள்ள பெரும்பான்மையோர் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருந்துள்ளனர். ஆயினும் பொலிஸ்படை, இராணுவப்படை, அரசாங்கசேவை ஆகியவற்றில் பூரண அளவில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பது புலனுகிறது" என்றும் அறிக்கை கூறுயது.

"கைது செய்யயப்பட்ட ராணுவ உத்தியோகஸ்தர்கள் தங்கள் செய்கைபற்றி வருத்தம் தெரிவித்துள்ளனர். ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்" என்று கூறிய பீலிக்ஸ், கைதுசெய்யப்பட்டவர்கள் மீது நியாயமான முறையில் விசாரணை நடத்தப்படும் என்றும் குற்றங்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்படும் என்றும், இவ்விஷயத்தில் அரசாங்கம் தன் கடமையைச் செய்யும் என்பதில் பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளலாம் என்றும் கூறினர்.

## 4 கால்களுடன் அதிசய கோழிக்குஞ்சு

உரும்பராய், செவ்வாய் அதிசயக்கோழிக்குஞ்சுஒன்று இங்கு பொரித்திருக்கிறது. நான்கு கால் களுடன்காணப்படும் இந்த அதிசயக் குஞ்சைப் பலரும் சென்று பார்த்துச் செல்கின்றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.